Registered No. M. 5068

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி-ளு கார்த்திகை-மீ 28-உ 13—12—1948 ஹிஜ்ரி 1368 ஸபர்-மீ 11-உ திங்கட்கிழமை } இதழ் 43

இந்திய முஸ்லிம்கள் கடமை.

வாழ்க்கையின் நெருக்கடியான கட்டத்தில், எந்நிலையிலிருக்கவேண்டிய நாம் எந்நிலையிலிருக்கிறோம்? என்ற ஏக்கம் இந்திய முஸ்லிம்களுக்கு பெரும் தடையாயிருந்துவருகிறது. அதை அகற்றிய பிறகே முஸ்லிம்கள் முன்னேற முடியும். 33 கோடி மக்களிடையே 4½ கோடி முஸ்லிம்கள் பிரச்னைக்கு தார்மீக முக்கியத்துவமுண்டு. அதை தீர்ப்பது இந்திய அரசியல் நிர்ணய சபை, அந்தரங்க சுத்தியுள்ள இந்தியர்களின் வேலை. இருப்பினும், இதில், அதிகமான பொறுப்பு முஸ்லிம்களுக்கே ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் ஜனநாயக தன்மைக்கு உகந்ததொரு வழியை நிர்ணயிப்பதில் ஒவ்வொரு முஸ்லிமும் தனக்குத்தானே வழியாகத் திகழவேண்டும்.

லட்சிய வாழ்க்கையே வாழ்க்கை. எனவே வாழ்க்கையைப்போலவே வாழ்க்கை லட்சியங்களை நேசிப்பதும் இயற்கை. லட்சியங்களுடன் துன்பங்களும் தேங்கியிருக்கின்றன. அவற்றை சகிக்கத் தயாராயில்லாதவரை லட்சியங்களை அடைவது அசாத்தியம். வீரர்கள் துன்பங்களால் மனங்கலங்குவதில்லை மானிட இயற்கைக்கு மனச் சோர்வு பொருந்துமாயினும் இஸ்லாமிய இயற்கைக்கு பொருந்துவதில்லை. இ லாமும் இஸ்லாமிய சரித்திரமும் போதிக்கும் பாடத்தில் துன்பங்களைப் பற்றி கதைப்பதற்கு சந்தர்ப்பமில்லை; அவகாசமும் கிடையாது.

வாழ்க்கை மட்டும் ஒரு லட்சியமல்ல. வாழ்நாட்களைக் கழித்து விடுவது பெரும் சாதனையுமல்ல. முஸ்லிம்கள் பொருத்தவரை வாழ்க்கை வேறு; மரணம் வேறல்ல. இரண்டும் லட்சியங்கள்தான். புனித லட்சியத்தால் வாழ்க்கை ஒரு போராட்டமாகப் பிரகாசிக்கும்; மரணம் தியாகமாகத் திகழும். முஸ்லிம்கள் வாழ்வதும் சாவதும் இஸ்லாமுக்காக, ஒழுக்கத்துக்காக, சகோதரத்துவத்துக்காக, பொதுநலனுக்காகவே இருத்தல்வேண்டும். அவ்வழியில் துன்பங்கள் நிறைந்த வாழ்க்கைப் பாலத்தை புன்சிரிப்புடன் கடந்து ஆண்டவன் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டே சிரித்த முகத்துடன் உயிர் விடுவதே இஸ்லாம். ஈமான், இஸ்லாமின் உட்கருத்தும் அதுவேயாகும்.

இந்த அடிப்படையுடன் நோக்கும்போது முஸ்லிம்கள் இன்றைய நிர்ப்பந்த நிலைமையால் கலங்குவதும், மனச் சோர்வடைந்து கதைத்துக்கொண்டிருப்பதும் இஸ்லாமுக்கு மாறானதென்பது விளங்கும். இன்றைய ஜனநாயக இந்தியா ஜனநாயகப் பிரியர்களிடம் தியாகத்தைக் கோருகின்றது. அதைச் செய்யாமல் சில்லரை விஷயங்களுக்காக கலங்கிக்கொண்டிருப்பதால் இந்திய முஸ்லிம்கள் விரும்பும் லட்சியங்களை அடைந்துவிட முடியாது

எந்நிலையிலிருக்க வேண்டிய நாம் எந்நிலையிலிருக்கிறோம்? இதற்கு அளிக்கப்படும் சரியான பதில் நம்முன் அடைபட்டிருக்கும் வழிகள் அனைத்தையும் திறக்க முடியும். வரவேற்கப்படுமென்ற நம்பிக்கையுடன் முஸ்லிம்கள் முன்னிலையில் சிலயோஜனைகளை சமர்ப்பிக்கிறோம்.

1. இந்திய ஜனநாயகம்.

தங்களுடைய இன்றைய நிலையை சரிவர உணர்வதுடன் இந்தியாவில் இன்று முஸ்லிம் ஆட்சி இல்லையென்பதையும் முஸ்லிம்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஏகாதிபத்திய நலனுக்காக வெள்ளையர்கள் முஸ்லிம்களுக்கு விகிதாசாரத்தைவிட அதிகமாகக் கொடுத்திருந்த சலுகைகள் வெள்ளையாட்சி

யுடன் முடிவடைந்து விட்டன. இனி அந்தக்காலம் ஒரு நாளும் திரும்பி வரப்போவதில்லை.

முஸ்லிம்கள் வருகைக்குமுன் இந்தியா அரசியல் சமூகத்துறையில் பலகூறுகளாகப் பிரிந்திருந்தது. இங்கு வந்த முஸ்லிம்கள் தங்கள் நாடு, பாஷை, நாகரீகத்தின் பல அம்சங்கள், எல்லாம் விட்டு, இந்த நாட்டையே தங்கள் தாயகமாகக் கொண்டு நாட்டை ஐக்கியப்படுத்தி, காபூல், சிந்து, கங்கை, யமுனை நதிகளின் கூறுகளை ஒன்று படுத்தி, ஐக்கிய சமுதாய சங்கமமொன்றை உருவாக்கினர். அதற்கு ஒரு தனி பாஷையை கொடுத்தன் மூலம் இந்தியாவின் நாற்திசைகளையும் இணைத்து எல்லா நாகரீகங்களும் கலந்ததொரு நாகரீகத்தை தோற்றுவித்தனர். எல்லோருக்கும் சொந்தமான நாட்டில் அனைவருக்கும் பொதுவான ஆட்சியிருந்தது. ஆனால் அரசன் மட்டும் முஸ்லிமாக இருந்தான். ஆங்கிலேயர்கள் முதல் ஐம்பது வருஷங்களில் முஸ்லிம்களுக்கெதிராக ஹிந்துக்களையும், கடைசி நாற்பது வருஷங்களில் ஹிந்துக்களுக் கெதிராக முஸ்லிம்களையும் தாக்கிவிட்டனர். முஸ்லிம்களுக்கு இருந்துவந்த சலுகைகள் ஆங்கிலேயர் செய்த மோசடியே யொழிய உண்மையானவையல்ல.

இன்றைய நிலைமையை தவருக அணுகி இந்திய சுதந்திரம் அடிமையின் புதிய அம்சமோவென்று இந்திய முஸ்லிம்கள் சந்தேகிக்க முற்பட்டு விடுகின்றனர். இந்தத் தவறுன போக்கு பிரயோஜனமற்றதும் தீங்கானதுமாகும். முஸ்லிம்கள் பொருத்தவரை இந்தியா சுதந்திர சோலையல்ல; அடிமைக் கூண்டு தானென்பதை ஒரு நிமிஷத்துக்காக ஒப்புக்கொள்வதாயிருப்பினும் கூட கூண்டிலடைபட்டும் கலங்காமல் பாடும் ஒரு பட்சியைப்பின்பற்றுவது நல்லதல்லவா வென்று கேட்கிறேம்.

பொறுமை, சகிப்புத்தன்மை, உறுதி மனித வாழ்க்கைக்கு என்றுமே வழிகாட்டியிருக்கின்றன. சுதந்திரமடைந்து விட்ட நாடு இனி எக்காரணத்தைக் கொண்டும் அடிமையாகப் போவதில்லை. நாலரை கோடி முஸ்லிம்களின் அரசியல் சமூக கலாசார அடிமை வாழ்க்கையை சுதந்திர இந்தியா அதிக நாள் வரை சகித்துக்கொண்டிருக்கமுடியாது. பாகிஸ்தானை பின்பற்றி இந்தியா வெற்றியடைவது சாத்தியமில்லை. பாகிஸ்தானுக்கு சிறுமையளிக்கும் போக்கு இந்தியாவுக்கு பெருமையையும், பலமுமளிக்காது தன்னுடைய கொள்கையைக் கொண்டே இந்தியா முன்னேற முடியும். தன்னுடைய உயரிய கொள்கையை இந்தியா கைவிடுவதறகில்லை.

இக்கட்டத்தில் பெரும்பான்மையினருக்கு ஒரு கடமையும் சிறுபான்மையினருக்கு ஒரு பொறுப்பும் உண்டு. பெரும்பான்மையினரின் விஸ்வாசம் நாட்டின் ஜீவநாடி என்றல் சிறுபான்மையினரின் விஸ்வாசம் நாட்டின் ஒற்றுமை அமைதி கௌரவம் ஒழுக்கம் கீர்த்திக்கு உறைகல்லாகும். பெரும்பான்மை ஹிந்து சகோதரர்கள் பெருந்தன்மையைப் பாதுகாப்பதும், பெரும்பான்மையினருடன் நல்லுறவு தங்கள் சுபிட்ச வாழ்க்கைக்கு அவசியமென்பதை சிறுபான்மை முஸ்லிம்கள் உணர்வதும் அவசியம். அண்ணனுடைய அந்தஸ்திலிருக்கும் ஹிந்துக்களின் உரிமை கௌரவம் தம்பியினுடைய நிலையிலிருக்கும் முஸ்லிம்களின் உரி ம அன்பு.

ஹிந்துக்களின் அன்பைப் பெறுவதற்கு முஸ்லிம்கள் ஹிந்துக்களை மனப் பூர்வமாய் கௌரவிக்க வேண்டும். முஸ்லிம்களால் கௌரவிக்கப்படுவதற்கு முஸ்லிம்களை ஹிந்துக்கள் அனபுடன் நடத்தவேண்டும் இன்றைய வெறுப்பு நிலைமை ஆங்கில ஆட்சியின் உற்பத்தியாகும். இனி இந்தியாவில் வெறுப்புக்கு இடமில்லை முஸ்லிம்கள் தனித்து தங்களைப்பற்றி மட்டும் சிந்திப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். இல்லையேல் இருபத்தெட்டு கோடி ஹிந்துக்களின் ஒரு பிரிவும் நாலரைகோடி முஸ்லிம்களின் இன்னொரு பிரிவும் நீடிக்கும். பெரும்பான்மை சிறு பான்மையின் இந்த போராட்டம் முடிவில் முஸ்லிம்களுக்கு அழிவையே கொடுக்கும்.

ஹிந்துமுஸ்லிம் என்ற பிரச்னை மறைவதால் சமூக அரசியல் பொருளாதார கட்சிகள் நாட்டில் தோன்ற முடியும். நாட்டிலுள்ள, உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க இடமுமில்லாத ஏழைகள், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஜாதிமத பேதமின்றி ஒன்ருகத் திரளுவர். இன்னொரு பக்கம் பரம்பரை கோடீஸ்வரர்கள், முதலாளித்துவ சுரண்டல் பேர்வழிகள், தலை கொழுத்தவர்கள் ஒன்ருகக் கூடுவர். உலகம் பூராவிலும் ஏழைகளே பெரும்பான்மையென்பது வெளிப்படை. இவ்விதமாக ஏழைகளாயிருக்கும் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், ஹரிஜனங்கள், விவசாயிகள், தொழிலாளிகளின் பெரும்பான்மைக்கும் விரல் விட்டு எண்ணிவிடத்தக்க முதலாளி வர்க்கத்தின் சிறுபான்மைக்குமிடையே போராட்டம் ஆரம்பமாகும்.

இன்று முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டு நிர்ப்பந்திக்கப்பட்டு ஏழைகளாயிருக்கின்றர்கள் நாட்டின் ஜனநாயகத்தில் முஸ்லிம்களுக்கு கிடைத்த வெற்றி இதுதான். இருப்பினும் ஜனநாயகத்துக்கு வித்திட்டிருக்கும் ஒரு நாட்டில் தாங்கள் இருந்துவருவதை முஸ்லிம்கள் உணர வேண்டும். உண்மையான இந்தியர்களாக மாறி இந்தியாவின் இன்றைய நிலைமைக்கு

உகந்த வகையில் தங்களை உடனடியாக மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டியது முஸ்லிம்களின் கடமை. கடந்த நூறுவருஷங்களுக்கும் இன்றைய நிலைமைக்கு மிடையே இருக்கும் முரண்பாட்டை மறந்து நாட்டையும் நாட்டிலுள்ள ஒவ்வொன்றையும் நேசிக்கவேண்டும். முஸ்லிம்கள் இன்று செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் இதுதான்.

கடந்த பத்து வருஷங்களில் இஸ்லாமின் பெயரால் நாம் வெறுக்கக் கற்றுக்கொண்டோம். ஹிந்துக்களை வெறுக்க நமக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டதென்பதை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். நம்முடைய வெறுப்பு முதலில் மிருகத்தனமான கொடுமைகளின் ரூபத்தில் நவகாளியில் வெளியாயிற்று இன்று ஹிந்துக்களிடையே முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பு வேலை செய்கிறது. முப்பத்து மூன்று கோடி மக்கள் வெறுப்பு நரகத்தில் சமாதான சொர்க்கத்தை உருவாக்க முடியாது. ஆகையால் இனி வெறுப்புக்குப் பதிலாக அன்பு ஆட்சி செலுத்த வேண்டும் அதில் முஸ்லிம்கள் முந்திக்கொள்ள வேண்டும்

2. ஜனநாயக அணி.

இந்தியாவின் தலைநகரமான டில்லியில் ஜனநாயக அணி அமைந்திருக்கிறது. அதன் தலைமைப்பொறுப்பு இந்திய அரசியல் நிர்ணய சபையின் கையிலிருக்கிறது இன்றைய இந்திய அரசாங்கமே நம் தலைமைப் பீடம். காங்கிரஸ் மேலிடத்திலிருக்கும் பண்டித நேரு, ராஜன் பாபு, மௌலானா ஆஸாத், ஸர்தார்பட்டேல் போன்றவர்கள் நம் உத்தேச ஜனநாயகத்தின் உருக்குக் கோபுரங்களாக இருந்து வருகின்றனர். ஜனநாயகத்தின் தன்மையை சந்தேகிக்கும் முஸ்லிம்கள் இன்னும் ஜனநாயக கட்டடம் பூர்த்தியாகவில்லை என்பதை உணருவதில்லை. இந்தியர்கள் அனைவரும் அரும்பாடுபட்டு அதை பூர்த்தி செய்யவேண்டும். அதில் முஸ்லிம்கள் தங்களுடைய பங்கை நிறைவேற்றாமல், மௌலானா அபுல்கலாம் ஆஸாத் விரும்பும் அளவுக்கு ஜனநாயகவாதிகளாக மாறாமல், ஜனநாயக உரிமைகளை மட்டும் அரசாங்கத்திடம் கோருவதால் கிடைத்துவிட முடியாது. முதலில் ஜனநாயக அணியில் நாம் தியாகம் செய்ய வேண்டும் அதை நிலை நிறுத்தும் வேலையில் சிப்பாய்களைப்போல் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகே ஜனநாயகத்திடமிருந்து நம் லட்சியங்களை எதிர்பார்க்க முடியும்.

முஸ்லிம்கள் மஹாத்மா காந்தி, பண்டிதநேருவின் ஜனநாயக அணியை பலப்படுத்த வேண்டும். தங்கள் சக்தி முழுவதையும் தேசிய சர்க்காருக்கு அளிக்க வேண்டும். இன்றைய நிலைமையில் குறை கூறிக்கொண்டிருப்பதை விட பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்ளவேண்டியதவசியம். தேசப்பற்று, தேச மக்களுடன் நல்லுறவு இவ்விரண்டினால்தான் நம் லட்சியங்கள் கைகூட முடியும். நவ இந்தியாவில் புதிய முறையில் உரிமைகளைக் கேட்கும் நாம் புதிய போக்கையும் மேற்கொள்ளவேண்டியதவசியம்.

3. தற்காலீக துன்பங்கள்.

நம்முடைய துன்பங்களை பிரதம மந்திரி பண்டித நேருவும் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆயினும் கஷ்டங்களைப்பற்றி கதைப்பதும் குறைகூறிக்கொண்டிருப்பதும் பரிகாரமாக முடியாது இந்த வழக்கத்தை முஸ்லிம்கள் விட்டாக வேண்டும். மாறுபட்ட சூழ்நிலையை மாற்றி அமைப்பதற்கு முயற்சிப்பதே நம் கடமை. இன்றைய கஷ்டங்கள் தற்காலீகமானவை. காலப்போக்கில் தானாகவே மறைந்து போகும். ஹிந்தி, ஹிந்துஸ்தானி போன்ற பிரச்னைகளை பிரமாதப்படுத்த வேண்டியதில்லை. முஸ்லிம்களாகிய நமக்கு உலகத்திலுள்ள ஜாதிகள், நாடுகள், நாகரீகங்கள், மனிதர்கள், பாஷைகளை நமதாக்கிக் கொள்ளும் தகுதி உண்டு. அஜம், ஈராக்கை நமதாக்கினோம். ஈரானி, துருக்கி, ஆப்கன், இந்திய மக்களை நமதாக்கிக்கொண்டோம். பாரசீகம், துருக்கி, புஷ்தூ முதலிய பாஷைகளைக் கற்றோம். இந்தியாவில் பேசப்படும் எல்லா பாஷைகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினோம். இன்று ஹிந்தியையும் கற்போம் நாம் இந்தியாவிலிருந்தாகவேண்டும். இந்தியாவையும், அதிலுள்ள வர்களையும் நேசித்தாகவேண்டும். இந்திய சுதந்திரத்தில் சுதந்திரமாக வாழ்ந்தாக வேண்டும் இது நம் தாயகம். பிரிக்க முடியாத ஒரு அங்கமே முஸ்லிம்கள். நாமாக தவறிச் செல்லாத வரை நம் வாழ்க்கை, நம் சக்தி, நம் நாடு, நம் ஜனநாயக உரிமைகளை யாராலும் அபகரிக்க முடியாது.

"ஆஸாத்"
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊர் ஏஜெண்டிடம் கேளுங்கள், உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ. 6/- (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

இறுதி வெற்றி நமதே.

—(காஷ்மீர் குயில் காஜா குலாம் முஹியத்தீன்.)—

சுதந்திரம் பறிபோன பிறகு 350 வருஷங்களாக இந்தியர்கள் பட்ட கஷ்டங்களையும் அனுபவித்த துன்பங்களையும் பற்றி எழுத வேண்டுமாயின் நீண்டதொரு சோகக் கதையாகவே போய்விடும். மனிதர்களுடன் மனிதர்கள் போல் நடந்து கொள்ளப்படவில்லை. பூலோக சொர்க்கமான இந்தியாவில் வாழும் மக்களின் சமூக அரசியல் பொருளாதார சீர்கேட்டைப் பார்த்து உலகம் பிரமித்தது. கல்வித்துறையில் உலக நாடுகளில் இந்தியாவே பிற்போக்கிலிருந்தது. வாய் திறக்க யாருக்கும் தைரியமிருக்கவில்லை.

விவசாயிகள், தொழிலாளிகள், பாட்டாளி மக்கள், சர்க்கார் சிப்பந்திகளின் கொடுமையால் நடைப் பிணங்களாயினர். விவசாயிகளின் உழைப்பு ஜமீன்தார்கள், நில சுவான்தார்கள், லேவாதேவிக்காரர்களின் இரும்புப் பெட்டிகளை நிரப்பிக்கொண்டிருந்தது. நெற்றி வியர்வை நிலத்தில் விழ இரவும் பகலுமாக வருஷம் பூராவும் உழைத்துவந்த உழைப்பாளி வருஷத்தில் இரண்டுமாதங்கள் கூட வயிறு நிறையக் கஞ்சி குடிக்கவும் தன் குழந்தைகளின் உலர்ந்து ஒட்டிய வயிற்றுக்கு கஞ்சியைவார்க்கவும் முடியாத நிலைமையிலிருந்தான்

அதற்கு மாறாக மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சிக்கொண்டிருந்த வீணர்கள் வயிறு புடைக்க உண்டு தொந்திபெருத்து பணியாட்கள் பணிசெய்ய உல்லாச உப்பரிகைகளில் இருபத்திநான்குமணி நேரமும் திளைத்திருந்தனர்.

எதற்கும் ஒரு எல்லையுண்டு. அக்கிரமம், அநியாயம், எல்லைமீறிப் போயிற்று. பறிபோன சுதந்திரத்தை மீண்டும் பெற 1931-ம் ஆண்டில் காஷ்மீர் சிங்கத்தின் தலைமையில் காஷ்மீர் பொதுமக்கள் வீறுகொண்டெழுந்தனர். தனி மனிதனின் அடக்கு முறையிலிருந்து விடுதலையடைய போராட்டம் துவங்கிற்று. அபராதங்கள், சிறைகூடங்கள்கள், தடியடிகள், துப்பாக்கி குண்டுகள் முதலிய அடக்கு முறைகளால் சுதந்திரப்போராட்டத்தை ஒடுக்க பதினேழு வருஷங்கள் முயற்சிகள் நடந்தன. ஆயினும் சகல துன்பங்களையும் சமாளித்து நம்முடைய சுதந்திரப்போராட்டம் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்தே வந்தது. கடைசியாக நவகாஷ்மீரின் அரசியல், பொருளாதார லட்சியங்கள் ‘காஷ்மீரை விட்டு வெளியேறு’ என்ற கோஷத்தின் ரூபத்தில் வெளிவந்தன இந்த இடைக்காலத்தில் காஷ்மீரின் ஒவ்வொரு குழந்தை, கிழவன், ஆண், பெண்களின் உள்ளத்திலும் சுதந்திர ஆர்வம் இடம்பெற்று ‘நவ காஷ்மீர் வாழ்க’ ‘காஷ்மீரை விட்டு வெளியேறு’ என்று நகரங்கள், கிராமங்களிலுள்ள காஷ்மீரிகள் ஒருமுகமாக கோஷித்தார்கள்.

அடக்குமுறை ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து உழைப்பவன் சுபிட்சமாய் வாழ்வதற்கு சந்தர்ப்பமளிக்கக்கூடிய அரசியல், பொருளாதார திட்டங்களுடன் ஜனநாயக ஆட்சி அமைக்க வேண்டுமென்று காஷ்மீர் மக்கள் ஆர்வம்கொண்டனர்.

காஷ்மீர சிங்கம் தேசீய மஹாநாட்டுக்கொடியை தாங்கி ‘காஷ்மீரை விட்டு வெளியேறு’ என்று கோஷித்தபோது அடக்குமுறை ஆட்சியும், காஷ்மீரிலும் காஷ்மீருக்கு வெளியேயுமிருந்த எல்லா பிற்போக்கு சக்திகளும் நமக்கு எதிராக அணிவகுத்து நின்றன. சுதந்திரதாகமும் உணர்ச்சியும் மேலிட்டிருந்த காஷ்மீர் மக்கள் அடக்குமுறையாட்சியின் மிருகத்தனமான கொடுமைகளையும் பிற் போக்காளர்களின் எதிர்ப்பையும் கண்டு சளைக்காமல் தொடர்ந்து போராடி பதினேழு மாதங்களின் போராட்டத்திற்கு பிறகு சுதந்திர விரோதிகளின் அணிகளை பிளந்துகொண்டு சுதந்திர லட்சியத்தை நோக்கி முன்னேறலாயினர் சுதந்திரத்திற்காக போராடிக்கொண்டிருந்த சமயத்தில், வெற்றி நிச்சயமென்றாகி, அடிமைத்தனத்தின் பழைய கோட்டை இடிந்து விழுந்துகொண்டிருந்த வேளையில் பதினேழு வருஷ தியாகங்களின் பலனை அடையவிருந்த கடைசி சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் தூண்டுதலால், மலை ஜாதிக் கொள்ளைக்கூட்டத்தினர் நம் நாட்டின் மீது இன்னொரு பக்கத்திலிருந்து படையெடுத்துவிட்டார்கள். நம்மை மீண்டும் அடிமைப்படுத்த பாகிஸ்தான் விரும்புவதே இந்த படையெடுப்பின் ஒரே நோக்கம்.

பழைய அடிமை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்த பிறகு மலை ஜாதி கொள்ளைக்கூட்டத்தினரைக் கொண்டு கொடுமையும், கொள்ளையும் நிறைந்த புதிய அடிமைத்தனத்தை தங்கள்மீது திணிக்க பாகிஸ்தான் விருப்புவதைக் கண்ட சுதந்திர ஆர்வம்கொண்ட காஷ்மீர மக்கள் காஷ்மீரசிங்கத்தின் தலைமையில் புதிய அடிமைத்தனத்தையும் எதிர்த்து போராட்டம் ஆரம்பித்தனர். “காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே சொந்தம். அதை நாமே பாதுகாப்போம்” என்று சண்டமாருதம்போல் முழங்கினர். பெருநாள் தொழுகை ஸ்ரீநகரில் நடத்துவோமென்று பெருமையடித்துக் கொண்டு பெஷாவரிலிருந்து புறப்பட்டுவந்த பட்டாணிய பதர்களை ஸ்ரீ நகர் வாயில்களில் முறியடித்து

பாகிஸ்தான் எத்திசையில் ......?

ஹைதராபாதில் இந்தியாவின் போலீஸ் நடவடிக்கையால், பாகிஸ்தானில் தலைவர்கள்மீது ஏற்பட்ட அவநம்பிக்கையும் மனச்சோர்வும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. பாக். அதிகார வர்க்கத்துக்கு முக்கியமான பிரச்னைகளை தீர்க்கக்கூடிய யோக்கியதையில்லை ஆகையால் தவறான கோஷங்கள் நடவடிக்கைகள் மூலம் பொதுஜன கவனத்தை வேறுதிசையில் திருப்ப முயலுகின்றனர். இந்திய ராணுவத்தை எதிர்த்துநிற்க பாகிஸ்தான் ராணுவத்திற்கு திராணியில்லை காஷ்மீரில் பாகிஸ்தான் வெற்றி அசாத்தியமென்று பொதுமக்கள் உணரவாரம்பித்துவிட்டார்கள் லாகூர் முதலிய நகரங்களில் சமீபத்தில் நடந்த விமானத் தாக்குதல் பாதுகாப்பு ஒத்திகைகளால் பொதுஜனங்களும், குறிப்பாக வியாபாரிகளும் உற்சாக மிழந்திருக்கின்றனர் யுத்தத்தில் இழுத்துவிட்டு அமைதியான தங்கள் வாழ்க்கைக்கு தலைவர்கள் உலைவைத்து விடுவார்களோவென்று சந்தேகிக்கின்றனர்.

சில தினங்களுக்குமுன் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் எல்லைப்புரத்திலும், பிரதம மந்திரி கிழக்கு வங்கத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். ஜனங்களிடையே உற்சாகம் உண்டுபண்ணுவதே அதன் நோக்கம். எல்லைப் பிரதமரையும், ராணுவ அதிகாரிகளையும் சந்தித்து காஷ்மீர் பாகிஸ்தானில் சேருவது சாத்தியமில்லையென்றும் இனி காஷ்மீர் பற்றி பிரமாதமாய் பிரசாரம் செய்ய வேண்டாமென்றும் கவர்னர் ஜெனரல் வற்புறுத்தியதாகத் தெரிகிறது காஷ்மீர் பிரச்னை பட்டாணியர்களின் கவனத்தை கவர்ந்திருப்பதால் அவர்களுடைய கவனத்தை வேறுபக்கம் திருப்புவதற்காக ராணுவத்தில் பட்டாணியர்களை சேர்க்கப் போவதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது

இந்தியா பாகிஸ்தானிடையே யுத்தம் மூண்டால் கிழக்கு வங்கம் அதோகதியாய் விடுமென்று காஷ்மீரில் பாகிஸ்தானுக்குக் கிடைத்த தோல்விகளால் கிளப்பிய வதந்திகளே பிரதம மந்திரியின் கிழக்கு வங்க விஜயத்திற்கு காரணமென்றும் யுத்தம் மூளப் போவதில்லையென்று ஜனங்களிடையே நம்பிக்கை உண்டாக்கும்படி அதிகார வர்க்கத்துக்கு யோஜனை கூறினாரென்றும் சொல்லப்படுகிறது.

அமைதியின்மையும் அவநம்பிக்கையும்

இருப்பினும் மேற்கு பாகிஸ்தான் மக்களுக்கு காஷ்மீர் போரில் அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. காஷ்மீர் பாகிஸ்தானுக்குக் கிடைக்கமுடியாதென்றும் காஷ்மீருக்காக இந்தியாவுடன் போர் செய்வதற்கு பாகிஸ்தானுக்கு சக்தியில்லையென்றும் பேசிக்கொள்ளுகின்றார்கள்.

காஷ்மீர் போரில் பாகிஸ்தான் ஐம்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிட்டிருக்கிறது. அத்துடன் பல கோடி ரூபாய் யுத்த சாதனங்கள் நாசமாயிருக்கின்றன ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான மலை ஜாதியினர் கொல்லப்பட்டும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கஹீனர்களாயும் போய்விட்டார்கள். ராவல்பிண்டி, மர்ரி, கோஜர்கான், ஜீலம், குஜராத், வஸீராபாத், லாலாமூஸா, முஸபராபாத், அபேடாபாத், பெஷாவர், பன்னூ, மர்தான் ஆஸ்பத்திரிகளெல்லாம் காயமுற்றவர்களால் நிரப்பிவிட்டன. மேலும் பாகிஸ்தான் ஆதிக்கத்திலுள்ள காஷ்மீர் பிரதேசத்தில் லட்சக் கணக்கில் காஷ்மீரிகள் வீணர்களாகத் திரிவதுடன் ராவல்பிண்டி, கோஜர்கான், பெஷாவர், அபேடாபாத், மர்ரி முதலிய ஊர்களில் பல்லாயிரக் கணக்கில் பரதேசிகளாக அலைந்துக்கொண்டு மிருக்கின்றனர். இரண்டு டொமினியன்களுக்கும் யுத்தம் மூளுவதால் மேலும் பாகிஸ்தான் பாதிக்கப்பட வேண்டியிருக்கும். எந்த நகரமும் விமான தாக்குதலிலிருந்து தப்பமுடியாது

விரட்டியடித்தனர். மலை ஜாதி கொள்ளைக்காரர்கள் முறியடிக்கப்பட்ட பிறகு தர்ச்சிபெற்ற தன் ராணுவத்தை பாகிஸ்தான் போர்முனைகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. காஷ்மீரை எப்படியும் ஆக்ரமிக்க முயன்று வருகிறது. ஆனால் காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே சொந்தமென்று நாம் உறுதிகொண்டுவிட்டோம். காஷ்மீர் விதியின் எஜமானர்கள் காஷ்மீரிகளைத்தவிர வேறு எவரும் ஆகமுடியாது சுயநலக்கார பாகிஸ்தான் தவறான மதகோஷங்களாலும், ராணுவ நிர்ப்பந்தத்தாலும் நம்மைத் தடுத்துவிட முடியாது சுதந்திரப் போராட்டத்தில் செய்த தியாகங்களின் பலனை நம் கையிலிருந்து உலகத்தின் எந்த சக்தியும் பறிக்கமுடியாது. கிடைத்த சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு எவ்வளவு தியாகம்செய்ய வேண்டியிருப்பினும் பின் வாங்குவதில்லையென்று சபதம் செய்துவிட்டோம். சுதந்திர ஆர்வமுள்ள காஷ்மீரிகள் மோதிய ஒவ்வொரு சமயத்திலும் வெற்றியடைந்ததற்கும், அடக்குமுறை தோல்வியடைந்ததற்கும் நம்முடைய பதினேழு வருஷ போராட்டமே சான்று. இன்று நாம் பாகிஸ்தான் அடக்குமுறையை எதிர்த்துப் போரிடுகிறோம். இந்த கடைசி சுதந்திரப் போராட்டத்திலும் இறுதி வெற்றி நமதேயென்று பரிபூரணமாக நம்புகிறோம். காஷ்மீர சிங்கம் வாழ்க! நவ காஷ்மீரம் வாழ்க!!

சீனாவின் எதிர்காலம்.

சீன சர்க்காருக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நாலா பக்கங்களிலிருந்தும் கம்யூனிஸ்ட் படைகள் தலைநகரை நோக்கி முன்னேறுகின்றன அமெரிக்க உதவி கிடைத்தாலொழிய சர்க்கார் துருப்புக்கள் அதிக நாள்வரை சமாளித்து நிற்க முடியாதென்று சீன சர்க்கார் நினைப்பதாகத் தெரிகிறது. உதவியைக் கோரி விடுத்த வேண்டுகோள்களனைத்தும் பலனளிக்காமல் போகவே ஸ்ரீமதி சியாங் பிரஸிடெண்ட் ட்ரூமனிடம் உதவியைக் கேட்க அமெரிக்காவுக்குப் போக வேண்டியதாயிற்று. அமெரிக்க சர்க்காரின் அலட்சியப் போக்கையும் பத்திரிகைகளின் விமர்சனங்களையும் பார்த்தால், அமெரிக்கா உதவி செய்யுமென்று நம்புவதற்கில்லை.

கம்யூனிஸ்ட் முன்னேற்றத்தின் பயனாக தலைநகரான நாங்கிங், ஷெங்காயிலிருந்து வெளியேற ஜெனரல் சியாங் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது. முக்கியமான தஸ்தவேஜுகளை சேகரிக்கவும் தெற்குச் சீனாவில் ஒரு இடத்துக்கு போகத் தயாராயிருக்கும்படியும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு கிடைத்திருப்பதாக ராய்ட்டர் செய்தியொன்று கூறுகிறது. வடசீனாவுக்குப் பிறகு மத்திய சீனாவையும் காலி செய்ய சர்க்கார் துருப்புக்கள் தயாராகி வருகின்றன. சீனாவின் உள்நாட்டுப் போரை சர்வ சாதாரணமாய் எண்ணியிருந்தவர்கள் கம்யூனிஸ்ட் படைகளின் முன்னேற்றத்தையும் வெற்றிகளையும் பார்த்து ஆச்சரியப்படுகின்றனர். கடந்த சில வருஷங்களாக சீன யுத்தமும் அப்படித்தானிருந்தது இன்று சீனாவின் உள்நாட்டுப்போர் கடுமையான யுத்தமாக மாறிவிட்டது. கடந்த சில வருஷங்களில் தங்கள் ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களின் நிர்வாகத்தைப் பலப்படுத்தி பொதுஜனங்களின் பொருளாதார சீர்கேட்டைப் போக்குவதற்கு கம்யூனிஸ்டுகள் முயன்று வந்தனர். அங்குள்ள மக்களுக்குள் உண்மையான ஒரு லட்சியத்திற்காக போராடுவதற்கு வேண்டிய உணர்ச்சியை உண்டாக்கிக் கூடவே ராணுவத்தை சீர்திருத்தி யுத்த முஸ்தீப்புக்கள் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். தங்களிடமிருக்கும் பிரதேசத்தில் முதலாளித்துவத்தையும் ஜமீன்தாரி முறையையும் ஒழித்து முதல் கஷ்டத்தைப் போக்கிக்கொண்டிருக்கின்றனர் இரண்டாவது கஷ்டமும் நீங்குவதற்கு சீனா முழுவதையும் ஆக்ரமித்தாக வேண்டியதவசியமென்று அவர்கள் கோஷிப்பது மக்களை ஆகர்ஷிக்கின்றது

அதற்கு மாறாக ஜெனரல் சியாங் பொதுமக்களின் நிலையை உயர்த்துவதற்கு ஒன்றுமே செய்யவில்லை. அவருடைய ஆதிக்கத்திலிருந்த சீனாவில் நாளுக்கு நாள் பொருளாதார அமைப்பு சீர்குலைந்துவந்தது.

காஷ்மீர் போர் பாகிஸ்தானிலுள்ள ஒவ்வொருவரின் கவனத்தையும் கவர்ந்து அதனால் எல்லாவித அலுவல்களும் ஸ்தம்பித்திருக்கும்போது இந்தியர்களின் தினசரி வாழ்க்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படாமலிருப்பதைப் பார்த்து நான் ஆச்சரியமடைகிறேன் என்று ஒரு மேற்கு பஞ்சாப் மந்திரி கூட சொன்னாராம்.

காஷ்மீரில் போர் நிறுத்துங்கள்.

இவ்வித நிலைமையால் ஜனங்களிடையே யுத்த எதிர்ப்பு மனப்பான்மை அதிகரித்து வருகிறது. யுத்தத்தினால் பிரயோஜனமில்லை யென்றும் ஆகையால் நிறுத்தப்படவேண்டுமென்றும் பொதுமக்கள் உணருகின்றனர். ஏதாவது பேரம் பேசிகிடைத்த வரையில் பெற்றுக்கொண்டுயுத்தத்தை நிறுத்திவிடுவதுதான் சரியென்றும், காஷ்மீர் முழுவதையும்விட்டு வெளியேற வேண்டியிருந்தால் தலைவர்களின் தகுதியின்மை ஜனங்களுக்குபுரிந்துவிடுமென்றும், அதனால் எதிர்ப்புணர்ச்சி பலமடைந்து விடுமென்றும் பாக் தலைவர்கள் நினைக்கின்றனர்.

தலைவர்களின் பிளவு.

மிஸ்டர் ஜின்னா பாகிஸ்தானுக்கு ஒருவரப்பிரசாதமாகவே இருந்தார். அவர் காலத்தில் குறைந்தபட்சம் தலைவர்களின் பிளவாவது வெளியே தெரியாமலிருந்தது. அவர் மரணத்திற்குப் பிறகு நிலைமை அறவே மாறிவருகின்றது. மேற்கு பஞ்சாப் தலைமைப் பதவிப் போட்டியுடன் மத்திய அரசாங்கத்தில் பல பரீட்சையும் நடந்து வருகிறது அதன் விளைவுகள் பாகிஸ்தான் முழுவதிலும் வெளியாகின்றன. மந்திரிசபையில் மாறுதல் செய்யும்படி மம்தோத்கானுக்கு பிரதம மந்திரி சொல்லியிருந்தார். அவரும் சம்மதித்தார். ஆனால் இந்த முடிவை கவர்னர் ஜெனரல் மாற்றிவிட்டதால் பிளவு விஸ்தரித்து வருகிறது. மப்தோத்கான் எதிரியான தௌலதானா கோஷ்டி, மாகாண முஸ்லிம்லீகை திருப்பவும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது ஆகையால் இந்த மாதத்துக்குள்ளேயே மந்திரி சபையில் மாறுதல் ஏற்பட்டால் ஆச்சரியமில்லை. இன்னொருபக்கம் சிந்துவிலும் இதே நிலைமைதான் இருந்து வருகிறது. மிஸ்டர் லியாகத் அலிகான் திரும்பி வந்திருப்பதால் மந்திரி சபையில் மாறுதல் ஏற்படுவது சாத்தியமே.

சமூக, பொருளாதார அமைப்பில் அடிப்படை மாறுதல்கள் செய்யாமலேயே அமெரிக்க டாலர்களைக் கொண்டு நிலைமையை சரிப்படுத்திக்கொள்ள முடியுமென்றும் அமெரிக்க யுத்த சாதனங்களின் உதவியால் கம்யூனிஸ்டுகளை முறியடித்துவிட முடியுமென்றும் அவர் நினைத்திருந்தார்.

அதன் பயனாக ஜனங்களின் கஷ்டங்கள் அதிகரித்தன. அதனால் உற்சாகமிழந்து அலுத்துப்போய் பத்து வருஷமாக நடந்துவரும் யுத்தத்தை எப்படியும் நிறுத்திவிடவேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். எனவே கம்யூனிஸ்ட் படைகளின் தாக்குதலை பூரணமாக எதிர்த்து நிற்காமலேயே சர்க்கார் துருப்புக்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிடுகின்றனர். அவருடைய சர்க்காரில் பொறுப்பு வாய்ந்த பேர்வழி வெளியிட்டிருப்பதைப்போல் இதே நிலைமை நீடிக்குமானால் ஜெனரல் சியாங் டிஸம்பர் மாத முடிவுக்குள் வட, மத்திய சீனாவை காலி செய்துவிட்டு தெற்கு சீனாவுக்கு மாறவேண்டியிருக்குமென்பது நிச்சயம் அத்துடன் அவருடைய கஷ்டங்கள் நீங்கிவிடமுடியாது; அதற்கு மாறாக அவருடைய நிலைமை மேலும் மோசமடையவே செய்யும். நாங்கிங், ஷாங்காய், டீன்டின் முதலிய முக்கிய துறைமுகங்களை இழந்தபிறகு அமெரிக்கா முதலிய இதர நாடுகளின் உதவியைப் பெறுவது அசாத்தியமாய்விடும். அரசாங்கம் நாட்டின் பொருளாதார நிலைமையையும் சமாளிக்கவு முடியாது அத்னால் பொதுஜன யெழுச்சியைத் தவிர்க்க முடியாமல் போய்விடும். மேலும் தங்கள் பிரதேசத்தில் நிர்வாகத்தை திருத்தியமைக்க ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு தாக்குதலை நிறுத்தினாலும் கம்யூனிஸ்ட் படைகள் சீனா முழுவதையும் ஆக்கிரமிக்காமல் யுத்தம் நிறுத்தப்போவதில்லை.

ஜெனரல் சியாங் கடைசிவரை அமெரிக்காவையே நம்பியிருக்கிறார், அமெரிக்கா தட்டிக் கழிப்பதாகத் தெரிகிறது ஜெனரல் சியாங்கின் கடிதத்துக்கு பிரஸிடெண்ட் ட்ரூமனால் உற்சாகமாகப் பதிலளிக்கப்படவில்லை. ஸ்ரீமதி சியாங்குக்கும் உற்சாகமான வரவேற்பு கிடைக்கவில்லை. இன்றைய நிலைமையில் சீனாவுக்கு உதவி செய்வதில் மிகவும் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று அமெரிக்க அதிகாரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். அமெரிக்கா இதுவரை சீனாவுக்கு அனுப்பிய யுத்த தளவாடங்களின் பெரும் பகுதி கம்யூனிஸ்டுகளின் கைக்குப்போய் சேர்ந்திருக்கிறது. சீன சர்க்கார் ராணுவ அதிகாரிகளே அதை விற்றுவிடுகின்றனர்; அல்லது சர்க்கார் துருப்புக்கள் சரணடைந்து ஆயுதங்களை கம்யூனிஸ்டுகளிடம் ஒப்படைத்துவிடுகின்றனர். ஆகையால் சீனாவுக்கு அளிக்கப்படும் உதவி கம்யூனிஸ்டுகளுக்கு போய்ச் சேருமென்று அமெரிக்க அரசியல் வாதிகள் சந்தேகிக்கின்றனர். அமெரிக்கா உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நெருக்கடியான இன்றைய நிலையில் சீன சர்க்கார் அதிகாரிகள் நீடித்திருப்பது சாத்தியமில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜெனரல் சியாங் நெருக்கடியான நேரத்திலும்கூட தன்னுடைய போக்கைமாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. அவருடைய பிரதம மந்திரி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் 'இன்று சைனாவுக்கு எல்லாவற்றையும்விட ஒரு அமெரிக்க தளபதியின் சேவை அவசியமென்று சொல்லியிருக்கிறார். நீண்டகால சமூகக் கொடுமைகள் பொருளாதார சீர்கேடுகளால் பொது மக்களிடையே ஏற்பட்டிருக்கும் அமைதியின்மை ஒரு அமெரிக்க ராணுவ நிபுணரால் நீங்கி விட முடியுமென்று நம்புவது தன்னையே ஏமாற்றிக் கொள்வதாகும். உண்மையான ஜனநாயக அரசாங்கம் ஏற்படாதவரை, பொது ஜனங்களின் மனப்பூர்வமான ஆதரவு கிடைக்காதவரை, கம்யூனிஸ்டுகளை எதிர்த்து வெற்றிபெற முடியாதென்பதை அவர் உணர வேண்டும். நிலைமை மோசமடைந்து தலைக்குமேல் தண்ணீர் ஓட ஆரம்பித்துவிட்டது.

கம்யூனிஸத்திலிருந்து காப்பாற்ற கிரீஸுக்கு ராணுவம், யுத்தசாதனங்கள், டாலர்கள் கொடுத்து பலவருஷங்களாக உதவிவரும் அமெரிக்காவே சீனா தோல்வியடைந்துவிடுமென்று கையை விரித்துவிட்ட பிறகு சீனாவை உலகத்தின் எந்த சக்தியும் காப்பாற்ற முடியாதென்பதை உணர்ந்து ஜெனரல் சியாங் விழிப்படைய வேண்டும். மக்களுக்கு இருந்துவரும் குறைகளை அறிந்து, அவற்றைப் போக்குவதில் ஈடுபட்டு மக்களே எஜமானர்களென்ற முறையில் ஜனநாயக உரிமைகள் அளிக்க முன்வந்தால் நாட்டு மக்களின் எதிர்ப்பை சமாளிக்க அமெரிக்காவிடம் கெஞ்ச வேண்டிய அவசியமில்லை. இன்று சீனாவுக்கு வேண்டியது அரசியல் சமூகப் புரட்சியேயொழிய அமெரிக்க ராணுவ நிபுணர்களல்ல. இல்லையேல் அடுத்த வருஷமுடிவுக்குள் சீனா முழுவதையும் கம்யூனிஸ்டுகள் ஆக்ரமித்துக் கொள்வதைத் தவிர்க்க முடியாமல் போகலாம்.

ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.

அதை ஆதரிப்பது உங்கள் தேசீயக்கடமை.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 13—12—'48 திங்கட்கிழமை { இதழ் 43

ஸர்தார் பட்டேல் எச்சரிக்கை.

—:0:—

முக்கியமான பிரச்னைகளில் மற்ற தலைவர்களை விட ஸர்தார் வல்லபாய் பட்டேலின் அபிப்பிராயம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதற்கு அவருடைய நிர்தாட்சண்யமான போக்கும், நேர்மையும், உறுதியும், உருக்குப் பிடியும்தான் காரணம். அவரது எச்சரிக்கை போலீஸ் நடவடிக்கையைவிட அதிகமாய் பயனளிக்குமென்பது அனுபவத்தில் கண்ட உண்மை. குவாலியர் பொதுக்கூட்டத்தில் சர்தார் விடுத்த எச்சரிக்கைக்குப் பிறகு ஹிந்து மஹாசபையினர், சேவக் சங்கத்தினர் முதலிய வகுப்புவாதிகள் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டிருந்தால் புத்திசாலித்தனமா யிருந்திருக்கும். அதற்குமாருக சர்க்காரை எதிர்த்து சத்தியாக்கிரஹத்தில் இறங்கியிருப்பது துரதிர்ஷ்டமாகும்.

சர்தார் பட்டேலின் சிறந்த நிர்வாகத் திறமையை அவருடைய அரசியல் எதிரிகளும் ஒப்புக்கொள்வர். எந்த சமயத்தில் என்ன செய்ய வேண்டுமென்று அவருக்குத் தெரியும் அதில் எப்பொழுதும் அவர் தவறியதேயில்லை. முஸ்லிம் வகுப்புவாதிகளை கண்டித்துபேசி வந்ததைப் பார்த்து முஸ்லிம்கள் மட்டுமின்றி சில ஹிந்துக்களும் கூட அவரை தவருக மதிக்க முற்பட்டது பைத்தியக்காரத் தனமாகும். அவரது சமீப கால பிரசங்கங்கள், அறிக்கைகள் ஒருபுறமிருக்க ஹைதராபாத் போலீஸ் நடவடிக்கை வெற்றிக்குப் பிறகு இந்திய முஸ்லிம்களைக் குறித்து அவர் வெளியிட்ட அபிப்பிராயம் ஒன்றே அவரை தவருக மதித்திருந்தவர்களை விழிப்புறச் செய்வதற்கு போதுமானதாக இருந்தது. ஆயினும் அவரது வேண்டுகோள்கள் வகுப்புவாதிகளின் காதுகளில் நுழையாமல் போய்விட்டன.

வேண்டிக்கொண்டதற்கிணங்க சங்க குருஜீயான கோல்வால்கர், ஸர்தார் பட்டேலையும், பண்டித நேருவையும் பேட்டி காண்பதற்கு டில்லிக்குப் போக மத்திய மாகாண சர்க்காரால் அனுமதிக்கப்பட்டார். ஸர்தார் பட்டேலைப் பேட்டிகண்ட கோல்வால்கரிடம் சில நிபந்தனைகளுக்கு இணங்குவதா யிருந்தால் சங்கத்தின் மீதுள்ள தடை பற்றிய பிரச்னையை மீண்டும் பரிசீலனை செய்வது சாத்தியமா யிருக்குமென்று அறிவிக்கப்பட்டது. முதலில் தடை நீக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தியதுடன் நாகபுரிக்கும் திரும்பிச் செல்லவும் மறுத்து கோல்வால்கர் சத்தியாக்கிரஹத்துக்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்துவிட்டார். தடை செய்யப்பட்டிருந்தும் பஹிரங்கமாக சேவக் சங்கம் நடவடிக்கைகளில் இறங்கிற்று சில பத்திரிகைகள் கூட சேவக் சங்கத்தை ஆதரித்து பிரசாரம் செய்யத்துடங்கிவிட்டன.

உள்நாட்டு மந்திரியான சர்தார் பட்டேல் கோல்வால்கருக்கு பேட்டியளித்தது சகஜமான விஷயம் பண்டித நேரு இங்கிலாந்திலிருந்து திரும்பிய பிறகு பொதுஜன நன்மையை உத்தேசித்து சங்கத்தின்மீதுள்ள தடை நீடிக்க வேண்டியதவசியமென்று தீர்மானிக்கப்பட்டது சாதாரணமாக பண்டிதநேருவுக்குப் பதிலாக வேறு யார் பிரதம மந்திரியாக இருந்தாலும் முக்கியமான பிரச்னைகளில் பிரதம மந்திரியின் அபிப்பிராயம் தெரிந்துகொள்ளாமல் முடிவுசெய்வது அசாத்தியமாகவே யிருந்திருக்கும். ஆனல் அதை தவருகப் பிரயோஜனப்படுத்திக்கொண்டு சேவக்சங்கத்தினர் சர்தார் பட்டேல் தங்களுக்குச் சாதகமா யிருப்பதாகவும் பண்டித நேருவே தங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதாகவும் துஷ்பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். பண்டித நேருவுக்கெதிராக சில சங்க பத்திரிகைகள் செய்துவரும் பிரசாரமே இதற்குப் போதிய சான்ருகும்

சாதாரணமாகவே பாஸிஸ்டுகளின் பிரசார ஆட்சியை எதிர்ப்பது கடினமையான காரியம். அதில் பிரிவினைக்குப் பிறகு பாஸிஸ்டு சக்திகளுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. இன்றைய சூழ்நிலையைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு கள்ளங்கபடமற்ற மக்களை காங்கிரஸுக்கு எதிராக தூண்டுவதில் அவர்கள் சகல முறைகளையும் கையாண்டுவருகின்றனர்.

விஸ்வாஸமுள்ள இந்திய முஸ்லிம்களுடன் சகோதரர்களாக நடந்துகொள்ள வேண்டியது ஹிந்துக்களின் கடமையென்றும் சுதந்திரம் கிடைத்துவிட்டதால் முஸ்லிம்களை எப்படி வேண்டுமானுலும் தொந்திரவு செய்யலாமென்று நினைப்பதால் புதிதாக கிடைத்த சுதந்திரம் அர்த்தமற்றதாகி விடுமென்றும் சேவக் சங்கத்தினர் குழப்பம் விளைவிக்க முயன்ருல் சவாலை ஏற்க பூரண பலத்துடன் இருப்பதாகவும் குவாலியர் கூட்டத்தில் சர்தார் பட்டேல் எச்சரித்து சேவக் சங்கத்தினரின் துஷ்பிரசாரத்தை அம்பலப் படுத்தி யிருக்கிருர்.

பிரிவினைக்குப் பிறகு நாட்டில் நடந்த தேசநலன் சம்மந்தப்பட்ட பரீக்ஷைகள் அத்தனையிலும் இந்திய முஸ்லிம்கள் தேரியிருக்கின்றனர். இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக பலாத்கார உணர்ச்சியுள்ள ஹிந்துக்களின் எண்ணிக்கை மிக சொற்பம் பெரும்பான்மையான ஹிந்துக்கள் இதர வகுப்பினரை சகோதரர்களாகவே பாவிக்கின்றனர். அன்பு, அஹிம்சையின் மூலமே நாடு முன்னேற முடியுமென்று நம்புகின்றனர். மஹாத்மா காந்திஜியின் கொள்கைகளை கொள்கைகளாகக் கொண்டிருக்கும் காங்கிரஸ் மஹாசபையை ஆதரிக்கின்றனர். இருந்தும் ஒரு சில

வகுப்புவாத பலாத்கார உணர்ச்சியுள்ள ஹிந்துக்களால் பிரிவினைக்குப் பிறகு இந்திய முஸ்லிம்கள் அடைந்த கஷ்ட நிஷ்டூரங்கள் கொஞ்சமல்ல. எனவே அரசியல் காரணங்களுக்காக வகுப்பு வாதத்தைக் கிளப்பிவிடும் எந்த சக்தியையும் அரசாங்கம் விட்டு வைக்க முடியாது ஆகையால் சேவக்சங்கத்தினருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது ஜனநாயகத்தில் நம்பிக்கைக்கொண்ட அனைவராலும் வரவேற்கப்படுமென்பது நிச்சயம்,

இந்தியமுஸ்லிம்கள் தனிப்பட்ட உரிமைகள்கோரவில்லை. வேண்டுமானால் தங்கள் உரிமைகளையும் விட்டுக்கொடுக்கத் தயாராகவே யிருக்கின்றனர் இந்தியாவின் இதர பிரஜைகளைப் போல் சுதந்திரமாகவும் கண்ணியமாகவும் தங்களையும் வாழ அனுமதிக்க வேண்டுமென்பதே அவர்களுடைய ஆசை. சுதந்திரத்திற்காக மற்றவர்களைப்போல் இந்திய முஸ்லிம்களும் தியாகம் செய்திருக்கின்றனர். சுதந்திரத்தை அனுபவிக்க அவர்களுக்கும் உரிமையளிப்பதே நியாயம். அரசியலிலிருந்து வகுப்புவாதம் நீங்கியபிறகே இது சாத்தியமாக முடியும்.

ஹிந்துக்கள் பொருத்தவரை உரிமைகளை பாதுகாப்பதற்காக தனி ஸ்தாபனம் அவசியமில்லை. நூற்றுக்கு எண்பத்தைந்தாக இருப்பவர்களின் அரசியல், கலாசார உரிமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமென்று பயப்படுவதற்கு காரணமே யில்லை. ஆகையால் வகுப்புவாத நடவடிக்கைகளில் விரயம் செய்யும் தங்களுடைய சக்தியையும் அதற்கு எதிராகசர்க்கார் சிலவிடவேண்டிருக்கும் நாட்டின் நிர்மாணத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் சிலவிட்டால் வெகு சீக்கிறத்தில் நாடு பலம்பெற்று விளங்கமுடியும் சேவக் சங்கத்தினரும் அதைத்தான் விரும்புகின்றனரென்று நம்புகிறோம். அதற்கு மாறாக இன்று ஆரம்பித்திருக்கும் நடவடிக்கைகளை நிறுத்தாமல் நாட்டில், வெறுப்பை வளர்த்துக்கொண்டு போவதால் நாடு மேலும் பலஹீனமே யடையும். ஆகையால் சர்தார் பட்டேல் முதலிய தேசீய தலைவர்களின் வேண்டுகோள்களை கருத்தில்கொண்டு தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்ளும்படியும் நாட்டின் சமாதானத்துக்கும் அமைதிக்கும் விடுக்கப்படும் எந்த சவாலையும் ஏற்க அரசாங்கம் தயாராயிருக்கிறதென்று சர்தார் விடுத்த எச்சரிக்கையால் விழிப்புறும்படியும் சேவக் சங்கத்தினர் ஹிந்து மஹாசபையினர் முதலிய வகுப்பு வாதிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

தேசீய முஸ்லிம்களை சந்தேகிப்பதா?

S. P. S. பழனிசாமி, கோவை.

நாம் சுதந்திரம் அடைந்து இன்றுடன் ஒரு வருஷம் மூன்று மாதம் ஆகிறது. நம தாய் நாட்டின் விடுதலைக்காக வீரத்தியாகம் செய்தவர்களுக்கு நாம் தலை வணங்குவோமாக. அவர்கள் செய்த சேவை நமக்கு வழிகாட்ட நாமும் நமது சக்திக்கு ஏற்ப மக்களுக்காகவும் தேசத்திற்காகவும் உழைக்கவேண்டும் மாந்தருள் ஒரு மாணிக்கமாக விளங்கிய உத்தமர் காந்தி மகான் நமக்கு வழி காட்டியதினால் நாம் சுதந்திரத்தை போராடி அடைந்தோம். அதனைப் போற்றி, வளர்த்துப் பயனடைய வேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகு அதனைக் காப்பதற்கும் ஒவ்வொருவரும் தமது கடமையைச் செய்ய முன் வர வேண்டும். சென்ற ஒரு வருஷமாக நாட்டில் நடந்து வரும் செயல்களும், மாறுபாடுகளும், நிகழ்ச்சிகளும் எல்லோருடைய கண்களையும் திரந்திருக்குமென்று நம்புகிறேன்.

ஜாதி, மத பேதமற்ற ஜன நாயக சர்க்காரை அமைக்க நம் தலைவர்கள் முயன்று வருகிறார்கள். இதற்குப் பெரிதும் உதவி புரிந்துகொண்டு வருகின்றவர்கள் தேசீய முஸ்லிம்களாவர் லீகர்களின் எதிர்ப்பை ஒருபுறம் சமாளித்துக்கொண்டும், மனசாக்ஷியை விற்றுவிடாமலும் நாம் இருக்கும் நாடுநமது என்பதை உணர்ந்தும் மற்றமுஸ்லிம்கள் அவர்களுக்கு இழைத்த சமூகக் கொடுமைகள் முதலியவைகளைச் சகித்துக்கொண்டும் சுதந்திரத்திற்காக அன்று பலர் தியாகத்தீயில் குதித்தனர். இன்றும் பல தேசீய முஸ்லிம்கள், அல்லும் பகலும் தேசத்திற்காக உண்மையாக உழைத்து வருகின்றனர் அவர்களைநாம்மறப்பதா? அல்லது அவர்களின் சேவையைக் குறைகூறி, நிந்திப்பதோ மன்னிக்க முடியாத குற்றமாகும் இந்த தேசம் அவர்களுக்கும் பொது உடைமையான சொத்தாகும். மதவெறியினாலும் சுய நலப் பேராசையினாலும் கண்மூடித் தன்மையாகப் பல முஸ்லிம் சகோதரர்கள் இந்திய மண்ணிலிருந்துக்கொண்டு பாகிஸ்தானுக்காக 5-ம் படை வேலை செய்கின்றார்கள் என்பதற்காக தேசீய முஸ்லிம்களைச் சந்தேகிப்பதா? இந்தியாவிற்காகப்போர் புரிந்து வீரசுவர்க்கம் அடைந்த பிரிகேடியர் உஸ்மான் இதற்குசான்று இதை ஒருநாளும் நாம் புறக்கணிக்க முடியாது.

முள்ளில் ரோஜாவைப்போல முஸ்லீம்களினூடே தேசீய வீரர்களாகத் தோன்றியுள்ளவர்களில் ஒரு சிலர்தான். அதில் கோவை K. A. சுபஹான் அவர்களும் A. K. அப்துல்ரஹீம் அவர்களுமாவர். இவர்கள் தங்கள் சொந்த நலன்களைத் துறந்துவிட்டு பல சத்தியாக்கிரஹங்களிலும் பல தியாகங்களைப் புரிந்து சிறை சென்றவர்கள். செல்லாக் காசுகளான பல முஸ்லிம் லீகர்களால் சமூகப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள். இன்னும் தேசத்திற்காகப் பல ஆக்க வேலைகள் புரிந்து வருகின்றார்கள். புகழ்ச்சியையும் விளம்பரத்தையும் இவர்கள் விரும்புவதில்லை. தூய்மையான உள்ளம் படைத்தவர்கள். காந்தி மகானின் கருணைக்குப் பாத்திரமானவர்கள். தேசத்தின் பல பாகங்களிலும் இவர்களைப் போன்று சிப்பிக்குள் முத்துபோன்ற பல பரிசுத்த தேச பக்த முஸ்லிம் தியாகிகள் உழைத்து வருகின்றார்கள். அப்படிப்பட்டவர்களைச் சந்தேகிப்பது மகா பாவம். அவர்களுக்கு நமது வீரவணக்கம் உரியதாகுக! வாழ்க தியாகிகள் !! வாழ்க இந்தியா !!!

ஜெய் ஹிந்த்.

கலை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஓவியம்.

மனித உருவங்களை வரைதலும், இசையும் முக்கியமாகக் கருவியிசையும், நாட்டியமும் இஸ்லாமால் வெறுக்கப்படாவிட்டாலும் வெகுவாக ஆதரிக்கப்படவில்லை. இஸ்லாம் இசைக்கலைகளை ஆதரிக்கவில்லை; எறிட்டுக்கூடப் பார்ப்பதில்லை. அப்படியிருப்பினும், ஓவியத்திலும் இசையிலும் ஹிந்து முஸ்லிம்கள் வாழ்க்கை ஒன்றையொன்று தழுவி வளர்ந்தன. 'ஆதியில் ஆண்ட முஸ்லிம் அரசர்களால், மற்றக் கலைகளைப் போன்று ஓவியக்கலை கவனிக்கப்படவுமில்லை; ஆதரிக்கப்படவுமில்லை. ஓவியம் சிலைகளோடு தொடர்புள்ளதால் ஆதி காலத்தில் இஸ்லாம் ஓவியத்தை தீச்செயலெனத்தள்ளி வைத்திருந்த காரணத்தால் ஓவியம் வளரவில்லை. இந்தப் பொதுவழக்கத்தை மீறி ஏக தேசம் முஸ்லிம் அரசர்களும் பிரபுக்களும் இக்கலையைப் பயின்றார்கள். ஓவியக்கலையில் நன்கு பழகிய ஏராளமான ஹிந்துக்கள் இஸ்லாமைத் தழுவியதும் தங்களுடைய பழைய பழக்க வழக்கங்களை விட்டுவிட்டிருக்கமாட்டார்கள். ஆகையால் அப்போதைய முஸ்லிம்களால் ஓவியம் புறக்கணிக்கப்பட்டது என்று பெரும்பாலும் சொல்லுகிறபடி, இருந்திருக்காது என்று நாம் கொள்ளலாம். புதிய முஸ்லிம்களில் பெரும்பான்மையோரும் அவர்களுடைய சந்ததியாரும் தங்களுடைய பழைய கலைகளுக்கு மீண்டும் திருப்பியிருக்கலாம். பாரசீகக்கருத்துக்களையும் எழுச்சியையும் கொண்டு இங்கு வந்த முஸ்லிம்களும் இதைப் பயின்றார்கள். அக்காலத்தில் ஹிந்துக்களைப்போல அவ்வளவு ஆர்வமாகவும் அதே நோக்கத்துடனும் இக்கலைகளைப் பயிலாவிட்டாலும், ஓரளவு இக்கலையைப் பயின்றுவந்தார்கள். இவ்விதமாக அரசர்கள் இவைகளை உண்மையாக வெறுக்காவிட்டாலும், கருதவுமில்லை யென்பதும், ஆனால் பொதுமக்கள் அதை மிகுதியும் பயின்றார்கள் என்பதும் விளங்குகிறது.

'மொகலாயர்களின் நிலையோ வேறு கலைகளைப் பற்றி அவர்கள் வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அவைகளில் பற்றுள்ளவர்கள்; எல்லாக் கலைகளையும் எல்லா அம்சங்களிலும் ஆதரித்தார்கள். பாபரின் மூதாதையர்—தைமூர் மரபினர்—ஓவியக் கலையில் சிறந்தவர்களெனவும் பற்றுள்ளவர்களெனவும் பெயர்பெற்றவர்கள். அவர்களது நூல் நிலையத்திலிருந்து ஆய்ந்தெடுத்த ஓவியங்களைப் பாபர் கொண்டுவர முடிந்தது. இவ்வோவியங்களை அரிய பொக்கிஷமெனப் பெருமையோடு இந்திய மொகலாய பேரரசர்கள் போற்றிவந்தார்கள்.'

'முஸ்லிம்களுக்கு முந்திய கால ஓவியங்கள் — ஹிந்து, ஜைன, புத்த ஓவியங்கள்—தனி அம்சங்கள் உடையனவாயிருந்தன. அவைகளில் விளங்கும் மெய்ப் பொலிவு ஹிந்து, ஜைன, புத்த மதத்தினருக்குச் சொந்தம். அவைகளினமைப்பில் பொதிந்துள்ள பொருளும் அவர்களுடையதே. பல இனத்தாரின் அனுபவங்களினின்றும் திரட்டப்பட்ட நாகரீகத்தின் அழகுணர்ச்சியை அவை வெளிப்படுத்துகின்றன. மாறுபடும் இருமைகளான — உவகை வருத்தம், இன்ப துன்பம், வெற்றி தோல்வி, இம்மை மறுமை, பற்று துறவு, ஐம்பொறிக் கடிமை ஐம்பொறியாட்சி, ஆசை அமைதி, இயக்கம் அசைவின்மை, காமம் சாந்தம் இவைகளினால் அவதியுறுது நடு நிலை வகித்துவரும் அனுபவ முதிர்ச்சியின் பயனை அவை வெளிக்காட்டுகின்றன......... ஆதிகாலத்திய இந்திய ஓவியங்களில் எஞ்சியிருப்பன அஜந்தாச் சித்திரங்களே........கிருஸ்து சகாப்தத்திற்கு முந்திய இலக்கியங்களில், அதாவது வினய பிதாகாவிலும் பின் காலத்திய இராமாயணம், சாகுந்தலம் முதலியவற்றிலும் ஓவியங்களைப்பற்றிய குறிப்புக்களிருக்கின்றன. பழங்காலத்திய ஓவியங்களின் உண்மையான துண்டு துணுக்குகள் அநேக குறைகளில் இருக்கின்றன. ஆனால் இந்தியா முழுதும் ஒருகாலத்தில் பரவியிருந்த கலையின் சிறப்பை விளக்குகின்ற ஓவியங்களின் எஞ்சிய பகுதிகளில் வனப்பு, வளம் நிறைந்தவை, அஜந்தாவில் காணப்படுகின்றன. கல்லைக் குடைந்து செதுக்கப்பட்ட கோயில்களின் சுவர்களையும், கூறையுட்புறங்களையும் அழகுபடுத்துகின்றன. அவ்வோவியங்கள்...........கிருஸ்து சகாப்தத்தின் முதலாறு நூற்றுண்டுகளில் அவை செதுக்கப் பட்டவை. ஆர்வத்தீயையும் பக்தித்தாகத்தையும் தணிக்கவல்ல உயிர் ஓவியங்களைப் படைப்பதற்கு நில மன்னர் நீதியும், வணிக மன்னர் பணமும் அள்ளிச் சொரியப் பட்டன'

'பாபர் இந்தியாவைக் கைப்பற்றியபோது பிஹ்ஸாது உன்னத நிலையிலிருந்தான். அவனுடைய ஓவிய நடையே அழகுக்கு எடுத்துக்காட்டாக நிலவியது. அருங்கலை விநோதனான பாபரும் அவனது தோழர்களும், பின்காலத்தில், பாரசீகத்தில் ஒளிந்திருந்து இந்தியாவுக்கு ஓடிவந்த ஹுமாயூனும், சாகதாய்ப் பிரபுக்களும் பிஹ்ஸாதைச் சிறந்தவனெனக் கொண்டாடினார்கள். இந்திய ஓவியர்களால் பின்பற்றத் தகுந்த ஓவியன் என அவனை மதித்தார்கள். பிஹ்ஸாதும் அவனுடைய முறையும் இந்திய ஓவியர்

களுக்கு முன்மாதிரியாயின. தைமூரிய ஓவியமுறை அஜாந்தா முறையோடு கலக்கப்பட்டது. இந்தக்கலையின் சிறப்பான அம்சம் என்னவெனில் இது மிகுதியும் தனி நபரைப்பற்றி யிருக்கும். பொதுமக்களைப் பற்றியும், கூட்டத்தைப்பற்றியும் இக்கலையில் அக்கறை காட்டப்படவில்லை. மனோ சிருஷ்டியில் அதற்கு விருப்பமே யிருந்ததில்லை. பொருள்களை வெட்ட வெளிச்சத்தில் அது காண்கிறது; தெளிவான வெளிக்கோடுடையதாக இருக்கிறது. தனி உருவத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் நன்கு கவனிக்கிறது. உயிர்த்துடிப்பை மிகுந்த உன்னிப்போடு உணர்கிறது. அதன் வரைவுகளில் மிகுதியான ஆற்றலைக் காட்டுகிறது’ ‘அஜந்தாச் சித்திரங்களிற் போல இங்கும் கோடுகளே கருத்தைத்தெரிவிப்பன. எனினும் இவ் விருவகைக் கோடுகளுள்ளும் எவ்வளவு வேறுபாடு! .... இச்சித்திரங்களை உருவாக்கும் ஆதார அம்சங்கள், அஜாந்தச் சித்திரங்களின் ஆதார அம்சங்களோடு மிகவும் மாறுபட்டவை’. ‘மொகலாயப் பேரரசர்களுடைய ஆதரவில் இவ் விருவகைக் கலையுணர்வுகளும் கூடி இப் புதிய முறையை உண்டாக்கின. அஜாந்தச் சித்திரத்தில் மேலோங்கிக் காணும் வளைவுத் தன்மையுடன் சமர்க்கண்டு, ஹீரட்டிலிருந்து கொணர்ந்த புதிய ஓவிய விதிகளான அங்கப் பொருத்தம், விகிதம், இடைவெளி முதலியன சேர்க்கப்பட்டன; பழைய படாடோபத்தோடு புதிய ஒளிகள் சேர்க்கப்பட்டன; ஆனாயாசமான எளிய வாழ்வோடு கடுமையான அரண்மனைசட்ட திட்டங்கள், சம்பிரதாயங்கள்சேர்க்கப்பட்டன. இதன் விளைவாய் ஹிந்து முஸ்லிம்களுடைய சக்தியும் ஆற்றலும் ஓரளவு தியாகம் செய்யப்பட்டன. கர்வமும் கண்ணியமும் சம்பாதிக்கப்பட்டன. அத்துடன் அதிசயமான வர்ணச் செழிப்புமநுபமான கோடும் பெறப்பட்டன. புதிய முறையின் வளர்ச்சி வெகு விரைவில் கிடைத்தது. ஒருக்கால் பாபர் ஆக்ராவிலுள்ள இந்தியக் கலைஞர்களாகிய ஹிந்து முஸ்லிம்களுக்கு ஆக்ராவில் தைமூரது ஓவிய மாதிரிகளை அறிமுகப் படுத்தினார்போலும்............ இந்த ஆதிகால முறையில் கூட கிளார்க் என்பவரால் ஹுமாயூன் முறையெனக் கூறப்படுவதில், இந்திய உணர்ச்சிதவறாது தென்படுவதுமகிழ்ச்சி தரும் விஷயமே........ பின்வந்த அக்பர் காலத்திய கலைஞர்கள், அபுல்பாஸ்லால் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு முஹம்மதியக் கலைஞர்கள்—புருக் க்வால்மக், ஷீராஸைச் சேர்ந்த சாமத், தாப்பிஸைச் சேர்ந்த மீர் ஸையது அலி, மிஸ்கின் ஆகியோர் இம்முறையில் பயின்றவர்களாக இருக்கக்கூடும். இவர்களிடம் பயிற்சி பெற வந்த ஹிந்துக்கள் பரம்பரையாக வந்த ஓவியக் கலையில் திறமை வாய்ந்தவர்களாகவும், பேராசனுடைய சபைக்கு அழைக்கப்படத் தக்க புகழ்பெற்றவர்களாகவும் இருந்திருக்க வேண்டும். இவர்கள் தங்களுடைய திறமைகளை இந்தப் புதிய எஜமானர்களுடைய சேவையில் மாற்றினார்கள். இம் மன்னர்களுக்குத் திருப்தியளிக்கக்கூடிய படங்களை வரையலாயினர். அக்பரது காலமாகிய அந்நாளிலேயே இந்த ஓவியத்தில் ஹிந்து முஸ்லிம் முறை நல்ல அபிவிருத்தியுடன் தோன்றியதற் கிதுவே காரணம். அயின் - இ - அக்பரியில், தஸ்வஸ்த், பாஸவன், கேசோலால், முகுந்தன், மாதவன், ஜகந்நாதன், மஹேசன், கேப்கரான், தாரா, சேனாலாலா, ஹரிபான்ஸ், ராம் போன்றவர்களுடைய பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அக்காலத்திய ஓவியங்களிற் பலவற்றுள் இன்னும் அனேக ஹிந்துப்பெயர்கள் காணப்படுகின்றன... ... பாங்கிபுரத்தில் குதாபக்ஷ் நூல் நிலையத்தில் போற்றி வைக்கப்பட்டிருக்கிற கையெழுத்துப் படங்களில் துளசி, சூர்ஜன், சூரதாஷர், ஈஸர். சங்கர், ராம்ஆஸர், பான்வாலி. நந்தா, நான்கா, ஜகஜீவன், தர்மதாஸர், நாராயணன். சாதார்மன், சூராஜ் தியோ ஜீவன். சாரான், கங்காசிங், பரஸ், தன்னா, பீமன், முதலிய பல பெயர்கள் காணப்படுகின்றன. சில படங்களில் இவ் வோவியர்களுடைய சொந்த நாடுகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் குவாலியர், குஜராத், காஷ்மீரம் மாத்திரம் காணப்படுவது விநோதமான விஷயமாகும். ஆகவே இவைகள்தான் மத்திய காலங்களின் முற்பகுதியில் ஹிந்துக்கலைகளுக்கு மிகவும் பிரசித்தமான இடங்களாக இருந்திருக்க வேண்டும். அக்பருடைய ஓவியர்கள் இவ்விடங்களிலிருந்து வந்தார்களென்ற விஷயம், அஜந்தாவிற்குப் பிறகும் ஹிந்துக்கலை செழித்ததென்று கூறப்படுவதை உறுதிப்படுத்துகிறது. மொகலாய காலத்திய கலையானது மத்திய ஆசியா அல்லது பாரசீகக் கலையின் முழுவாரிசாகத் தோன்றியதல்ல; ஆனால் புது மனத் துடிப்புகளால் தோன்றியதும், அபிவிருத்தி செய்யப்பட்டதுமான பழைய கலையே.

‘ஒருபுறம் அஜந்தாச் சுவர் சித்திரங்களோடும் மறுபுறம் சமர்க்கண்டு ஹீரட்டிலிருந்து சிறியதாக வரையப்பட்டு உண்மையான அளவிலுள்ள சித்திரங்களோடும் இந்த ஹிந்து முஸ்லிம் முறை தொடர்பு உடையதாக இருந்தாலும், இவைகளிலும் அனேக வகை வழித்தோன்றல்களிருந்தனவெனக் கூறலாம். ஹிந்து முஸ்லிம் முறைச்சித்திரங்களில் ஒரு சில, அஜந்தாக் கலையையும், மற்றும் சில, சமர்க்கண்டு, ஹீரட் கலையையும் ஒட்டியிருந்தன. ஜெயப்பூர், கங்தா இன்னும் இமயமலைக் குன்றுகளிலுள்ள ராஜ்யங்களில் காணும் ரஜபுத்திர, பஹாரி முறைகள் புராதன ஹிந்து முறையைப் பெரிதும் ஒட்டியிருந்தன. தக்காணம், லக்ஷ்மணபுரி, காஷ்மீரம், பாட்னா முதலிய இடங்களைச்சேர்ந்த குவாலாம்கள் முஸ்லிம் முறைப்

பெரிதும் ஒட்டியிருந்தன. சீக்கிய குவாலாம் இரு வகைக்கும் இடைப்பட்டதாக இருந்தது. இவையெல்லாம் டில்லி அல்லது ஆக்ரா அரசவை முறையின் அடியாகப் பிறந்த வழி முறைகளே'

பாட்னாவைச் சேர்ந்த திரு. பி. ஸி. மானாக் இந்திய ஓவியங்களில் மிகச் சிறந்தவற்றைத் தம்மிடம் வைத்துள்ளார்; கலை ஆராய்வில் தேர்ச்சியுள்ளவர். இந்திய ஓவியக்கலைப்பற்றித் தம்முடைய ஆராய்ச்சியொன்றில் மொகலாய காலத்திய ஓவிய அபிவிருத்தியை விளக்கிக்கூறிய பிறகு சொல்லுகிறார்; 'கடுமையான மதானுஷ்டான முள்ள முஸ்லிமுக்கு மனித உருவத்தையோ வேறுஉயிருள்ள எந்தஉருவத்தையோ வரைவது அவனுடைய மதக் கட்டளைகளின்படி "ஹராம்" அல்லது விலக்கப்பட்ட செயலாகும். செதுக்கப்பட்ட எந்த உருவத்தையும் உனக்குச் செய்துகொள்ளாதே" என்ற மோஸஸின் பழைய சட்டம் கடுமையானஎல்லைவரையும் அனுஷ்டிக்கப்பட்டது. பண்பாடுபெற்ற பாரசீக ஷா அப்பாஸ்கள் காலத்திலும், தாராள மனோபாவமுள்ள ஆகி மொகலாயர்கள் காலத்திலும் மஹமதியர்கள் மேற்கூறிய கட்டளைகளை மீறினார்கள். அவர்களுடைய படங்கள் கண்ணுக்கும் புலன்களுக்கும் அற்புதமாக இருக்கின்றன. எனினும் இதயத்தைத் தொடுவதில்லை இவ்வகைத் தடை •விதிகள் அவ் வோவியர்களுடைய ஹிந்து மாணாக்கர்களுக்கோ நண்பர்களுக்கோ இருந்ததில்லை. அவர்களுடைய தேவர்கள் தேவதைகள் இதிகாச புராணங்களில் கூறிய உருவங்களோடு உலவக்கூடிய பேசுந்தெய்வங்களாக, மனிதர்களைக்கருதினான் ஹிந்து தன்னுடைய படங்களின் மூலமாக மனித இதயத்தைக் கவர்ந்து விடுவதற்குக் காரணம் இதுவே. உயர்ந்த கலையின் சிறந்த அம்சமும் இதுவே. பல்லாண்டுகளாகக் கலையும் சமயமும் கைகோர்த்து வந்திருக்கின்றன என்பதைச் சிந்தையிற் கொள்ளல் வேண்டும் ஐரோப்பிய மறு மலர்ச்சிக்காலத்திய ஒப்பிலா ஓவியங்கள் எல்லாம் பண்டைக்காலத்திய கிரேக்க ரோமக் கதைகளைச் சித்தரிக்கக் கூடியனவாகவும் மதச்சார்புடையனவாகவும் இருக்கும்.' (தொடரும்)

—இந்தியா பிரிக்கப்பட்டால்........
பாபு ராஜேந்திர பிரஸாத்.

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

இந்திய முஸ்லிம்களுக்கு விஸ்வாசமில்லை.

பாக். பத்திரிக்கை குற்றச்சாட்டு.

பாகிஸ்தானுக்குப்போய் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் இந்திய முஸ்லிம் வியாபாரிகளுக்கு விஸ்வாஸமில்லையென்று குற்றஞ்சாட்டி கராச்சியிலிருந்து வெளியாகும் 'சிந்து அப்ஸர்' கீழ்வருமாறு எழுதுகின்றது.

"இந்தியாவிலிருந்து வந்திருக்கும் அநேக முஸ்லிம் வியாபாரிகள் பாகிஸ்தானின் காஷ்மீர் யுத்தநிதிக்கு பணம் கொடுப்பதில்லை. தங்களுடைய பரிவாரங்கள் இந்தியாவிலேயே இருந்துவருவதால் இந்தியா பாகிஸ்தான் சச்சரவுகளில் பங்கெடுத்துக்கொள்ள முடியாதென்று அவர்கள் சொல்லுகின்றனர்.........காலியாயிருந்த கடைகளும் வீடுகளும் கொடுத்து மாப்பிள்ளைகள்போல் நடத்தப்படும் முஸ்லிம்களுக்கே பாகிஸ்தானிடம் விஸ்வாஸமில்லை. இங்கு கிடைத்தவரை சுரண்டிக்கொண்டு இந்தியாவுக்கே திரும்பிப் போய் விடுவதற்காக வேட்டைப்பட்சிகளாகவே அவர்கள் வந்திருக்கிறார்களா? அப்படியானால் இந்தியாவில் தங்கள் பரிவாரங்களை விட்டுவைத்து ஸிந்துவிலிருந்து வரும் ஹிந்துக்கள் செய்த குற்றமென்ன? ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும் மனித இயற்கை ஒன்றுதான். எனவே ஹிந்துக்களுடன் வேறுவிதமாக எதற்காக நடக்க வேண்டும்?...............பாகிஸ்தான் ஹைகமிஷனர்கள், ஸ்தானீகர்களில் அநேகர் இந்தியர்களாகவே இருக்கின்றனர். ஆகையால் அவர்களுடைய விஸ்வாஸத்தை நம்பமுடியாது. நிலைமை இவ்வாறிருக்க நம்முடைய ஹிந்து அதிகாரிகள், ஜமீன்தார்கள் மட்டும் தங்கள் பரிவாரங்களை பாகிஸ்தானுக்கே அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்க நமக்கு உரிமையில்லை எல்லோரையும் சமத்துவமாக நடத்துவதே இஸ்லாமிய ஆட்சியின் லட்சணமாக இருத்தல் வேண்டும்"

லீகர்களின் விஸ்வாஸம் இந்தியாவில்தான் சந்தேகிக்கப்படுகிறதென்றால் பாகிஸ்தானிலுமா சந்தேகிக்கப்படவேண்டும்! பாகிஸ்தான் நிலைமையைப்பார்த்தால் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்களை ஐந்தாம் படைக் காரர்களென்று சொல்லி வெளியேற்றாமல் இருக்குமென்று நம்புவதற்கில்லை.

பண்டாரவாடை லீகர்கள் திகைப்புற்றும் விஷமம் போகவில்லை.

பழைய குருடிகளாகவே யிருங்கள்!

புரியாதவர்க்கு இஸ்மாயில் யோசனை.

தனிக்காட்டு ரஜாக்களாக தங்கு தடையின்றி தப்புப்பிரசாரம் செய்துவந்த, லீக் தான்தோன்றிகளை தட்டிக்கேட்பதற்கும், லீக் தாள்களின் கொட்டத்தை அடக்குவதற்கும், தமிழ்நாட்டில், காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு ஒரு பத்திரிகையு மிருக்கவில்லை அவ்விதப் பெருங் குறையைப் போக்கி, நிர்தாட்சண்யமாய் லீக் தலைவர்களின் தில்லுமல்லுகளை அம்பலப்படுத்தி, முஸ்லிம் பொதுமக்களை விழிப்புறச்செய்துவரும் 'ஆஸாத்' மீது, லீக் தாள்கள், லீக் தலைவர்கள், அவர்களுக்கு வால் பிடிக்கும் லீக் சிஷ்யகோடிகளுக்கு வயிற்றெரிச்சல் ஏற்படுவது இயற்கை. அதற்காக "ஆஸாத்" அஞ்சிவிடப் போவதில்லை. இந்தியர்களின் உள்ளங்களில் ஆறுதவடுக்களை ஏற்படுத்திய துக்ககரமான சம்பவங்களுக்கும், இந்திய முஸ்லிம்களின் பரிதாபகரமான இன்றைய நிலைக்கும், காரணமாயிருந்த, இருந்துவருகிற கபடநாடக வேஷதாரிகளின் வேஷத்தைக்கலைத்து, சாயத்தை வெளுக்கவைத்து, வகுப்புவாத, இருசமுதாய சாபக்கேட்டை ஆழப்புதைத்து, சமத்துவ, சமதர்ம சமுதாயமொன்றை உருவாக்கும் புனிதப்பணியை. ஒருசில விஷமிகளின் கூச்சல்களுக்குப் பயந்து 'ஆஸாத்' விட்டுவிட பேர்வதில்லை.

28—11—48 இதழில், 'முஸ்லிம்' என்ற லீக் தாள், "ஊரில் அமைதியைக் குலைப்போர் மீது நடவடிக்கைஎடுக்கவேண்டும்" என்றுதலைப்புக்கொடுத்து, பண்டாரவாடையில் எஞ்சியிருக்கும் லீகர்களின் நீண்டதொரு வேண்டுகோளைப் பிரசுரித்திருக்கிறது.

8—11—48 இதழில், 'ஆஸாத்' தலையங்கத்துக்கு தரப்பட்ட 'பண்டாரவாடை சிரிக்குதே' என்ற தலைப்பு தன்னூரைக் கேவலப்படுத்தும் தொனியிலிருப்பதைப்பார்த்து வருந்துவதாகவும், அதிலுள்ள கருத்துக்கள் உண்மைக்கு மாறுனவையென்றும், லீக்நிலைமை தெளிவுபடாமல், எதிர்காலம் பற்றிப்புரியாமல் லீகர்கள் திகைப்புற்றிருப்பதால் ஆலோஜனை கூறவேண்டுமென மாலைகள் போட்டுக் கேட்டுக்கொண்டதன் பேரிலேதான், முஸ்லிம்கள் எப்பொழுதும் போல் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் முஸ்லிம் லீக்கிலேயே இருந்து வந்தால், முஸ்லிம்களை எதிரிகளென்று நினைப்பவர்கள் கூட சலுகைகள் அளிக்க முன்வருவார்களென்று இஸ்மாயீல் ராவுத்தர் பேசினதாகவும், அவரது திட சித்தம் குறித்து மகிழ்ச்சியும், பெருமையும், ஆனந்தமுமடைவதாயும் கற்பனைச் செய்திகளை பிரசுரித்தும் வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பிவிட்டு, 'ஆஸாத்' பணமூட்டைகளைக் கட்டப் பார்ப்பதாகவும், ஆகையால் சர்க்கார் நடவடிக்கையெடுக்கவேண்டுமென்றும் அதில் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. வேண்டுகோளுக்கு அடியில் ஏழு நபர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவர்கள் தான் பண்டாரவாடையில் பிரமுகர்களாம்!

பண்டாரவாடை இந்த ஜின்னு கூட்டத்துக்கு சொந்தமல்ல. எங்கள் இந்தியாவுக்கே சொந்தம் இது நமக்குத்தெரியும். அங்குஏராளமான உண்மைமுஸ்லிம் தேசபக்தர்களிருந்து வருவதையும் நாமறிவோம். அதற்குமாறாக, பச்சைப்பாம்புகளே பாயும்காடாகவே இருப்பினும் கூட, எங்கள் தாய்நாட்டின் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் நாம் கௌரவிப்போம். ஒன்றாயிருந்த நாட்டை இரண்டாக வெட்டி, ஒரு பகுதியை பாகிஸ்தான் (சுத்தமான இடம்) என்றும், இன்னொரு பகுதியை பாகிஸ்தானல்லாத (சுத்தமில்லாத) இந்தியா வென்றும் அழைத்து தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்துவரும் தங்கள் தாயகத்தை தாங்களே கேவலப்படுத்தும் ஈனப் போக்கு ஜின்னு பக்தர்களுக்கே பொருந்தும்

பிரிவினைக்குப்பிறகு அந்நிய நாட்டு ஜின்னு சாயபுவால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டை, ஜனநாயக நாட்டில் வகுப்புவாதம் பேசித்திரியும் ஜனநாயக எதிரியை, சமூக ஐக்கியத்தின் அடிப்படையில் இரு சமுதாய வெடி வைக்க முயலும் நிர்மூலியை நாட்டு நலனுக்காக துரும்பையும் தூக்கிப்போடாத சுயநலவாதியை, புனித இடமான மசூதியில் உண்மைக்கு மாறாகப்பேசி பிறகு, அப்படிப் பேசவேயில்லையென்று முழு பூசனிக்காயை சோற்றில் மறைக்கப்பார்த்த பேர்வழியைக்குறித்து, உண்மை முஸ்லிம்கள் நிறைந்த 'பண்டாரவாடை சிரிக்குதே' என்று தலைப்பு தரப்பட்டிருப்பதைப்பார்த்து, லீக் சிஷ்ய கோடிகளுக்கு பொறுக்க முடியவில்லைபோலும். பண்டாரவாடையில் உண்மை முஸ்லிம்கள் மாத்திரமாயிருக்கிறார்கள்! இதோ! காளான்களைப்போல் நாங்களுமிருக்கிறோம்! என்று தங்களை அம்பலப்படுத்திக்கொண்டிருக்கும் அபசகுனங்கள் மீது இரக்கப்படுகிறோம். ஆயினும் பண்டாரவாடையின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் இவர்களது செய்கையை மன்னிக்க முடியாது. ஒரு குடம் பாலில் ஒரு பொட்டு சாணி என்பதற்கொப்ப நடந்து கொண்டிருக்கும் நபர்களை

நேர்வழிப்படுத்துவது அங்குள்ள உண்மை முஸ்லிம்களின் கடமையாகும்.

ஜனநாயக நாட்டில் வகுப்புவாதியைக் குறித்து மகிழ்ச்சியும், பெருமையும், ஆனந்தமுமடையும் எங்களை 'பண்டாரவாடை சபிக்குதே' என்றல்லவா தலைப்புக்கொடுத்திருக்க வேண்டும்! மென்று இவர்கள் சலிப்படைந்திருந்தாலாவது அர்த்த முண்டு. நாமும் ஒப்புக்கொண்டிருக்க முடியும். உண்மையில் இந்தியாவின் நல்ல பெயரைக்கெடுத்து, காலித்தனத்தைத்தூண்டிவிட்டு அமைதியைக்குலைத்துலட்சக்கணக்கில் நிரபராதிகளின் உயிருக்கு உலைவைத்து, முடிவில் மஹாத்மா காந்திஜியின் உயிரையும் பலிவாங்கிய வகுப்பு வாதத்தையும். வெறியர்களையும் பண்டாரவாடை மட்டுமா சபிக்கும்! எழு லட்சம் இந்திய கிராமங்கள். 218 இந்திய நகரங்கள், மலைகள், குன்றுகள், பாயும் நதிகள், சமுத்திரத்தின் அலைகள் இல்லை உலகத்தின் ஒவ்வொரு அணுவும் இயற்கையுமே சபிக்கின்றன.

இருப்பினும், அன்று "தங்கள் தேசம்" என்று உணருவதற்குக்கூட தகுதியற்றிருந்த பேதைகளுக்கு, இன்று தங்களூர்யென்று உரிமை கொண்டாடுமளவுக்காவது உணர்வு ஏற்பட்டிருப்பதை வரவேற்கிறோம். பாரதநாட்டின் பண்டைய பெருமை, புராதன பண்பாட்டை பாழாக்கிய பதர்களுக்கு, பக்கபலமாயிருந்த புல்லறிவாளர்க்கு பண்டாரவாடை பெருமையில் அக்கரை ஏற்பட்டிருப்பதை பாராட்டுகிறோம்.

மாலைகளைப் போட்டு கேட்டுக் கொண்டதன் பேரிலேயே லீக் தலைவர் பேசினாராம்! போகட்டும்! பிரிவினைக்குப்பிறகு மாலைகளுக்காக ஏங்கிக் கொண்டிருந்த அவாத கழுத்தின் ஏக்கமும், தேடித்திரிந்தும் மாலைகளை அணிவிக்க லீக்தலைவர்கள் கிடைக்காது சோம்பிக்கிடந்த இவர்களது ஆசையும் தீர்ந்ததே! அதுவேபோதும்! தாங்கள் மட்டுந்தான் இந்திய முஸ்லிம்களென்று இவர்கள் எண்ணுகிறார்களா வென்பது தெரியவில்லை. எட்டும் இரண்டும் எத்தனையென்றுகூடத் தெரியாதவர்களுக்கு பரந்த உபகண்டத்தில் பரவிவாழும் முஸ்லிம்களைப்பற்றி தெரிந்திருக்க முடியாதென்பது வாஸ்தவமே ஆயினும் மாலைகள் போட்டு பேசும்படி தங்களால் மன்றாடிக் கேட்டுக்கொள்ளப்பட்ட அதே லீக் தலைவர், அன்று தினமே, பத்தே மைல் தூரத்திலிருக்கும் கும்பகோணம் வந்து 'வா' வென்றழைப்பார் யாருமின்றித் திரும்பிச்சென்றாரென்பதும், கும்பகோண முஸ்லிம்கள் ஆசையைத்தீர்த்துக்கொள்ளாமலேயே விட்டு விட்டனரென்பதும் இவர்களுக்குத் தெரியாது போலும்.

"பழைய லீக் மனப்பான்மையை விடாமலிருப்பவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை. அவர்களுக்கு ஏற்ற இடம் பாகிஸ்தானேயாகும். எவ்வளவு சீக்கிரமாக அவர்கள் வெளியேறுகிறார்களோ அவ்வளவே அவர்களுக்கும் நல்லது; நமக்கும் நல்லது." என்று சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால்நேரு லீகர்களுக்கு புத்திமதி கூறினார். அதற்கு நேர்மாறாக, முஸ்லிம்கள் எப்பொழுதும் போல் ஒற்றுமையுடனும், கட்டுப்பாடுடனும் லீகிலேயே இருந்துவரவேண்டுமென்று, லீக்நிலைமை தெளிவு படாமல், எதிர்காலம் பற்றிப்புரியாமல் திகைப்புற்றிருந்த சிஷ்ய கோடிகளுக்கு இஸ்மாயீல் ராவுத்தர் யோஜனை கூறினாராம்! சிஷ்ய கோடிகள் தங்கள் வேண்டுகோளில் இதை தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். மூட்டை கட்டிக்கொண்டு பாகிஸ்தானுக்குப்போக இவர்கள் தயாராயிருக்கிறார்களா வென்பது தெரியவில்லையாயினும் உள்ளே நுழைய முடியாமல் இஸ்லாமிய ஆட்சியின் கதவுகள் இரட்டைத்தாள் போடப்பட்டிருக்கின்றனவென்பதை நினைவூட்டுகிறோம்.

லீகர்களுக்கு முன்யோஜனை கிடையாதென்பது நமக்குத்தெரியும். இருந்திருந்தால் அவர்கள் பாகிஸ்தானை ஆதரித்திருக்கவேமுடியாது இரண்டுமந்திரிஸ்தானங்களைப்பற்றி இஸ்மாயீல் ராவுத்தர் பேசியதை மறைக்கும் முயற்சியில் தலைக்கு ஆபத்து தேடிக்கொள்ளவேண்டாமென்று எச்சரிக்கின்றோம். லீக் தலைவர்களின் கூச்சலுக்கும், லீக் தாள்களின் பிதற்றலுக்கும் மதிப்பிருந்த காலம் மலையேறி விட்டது.

சென்னையில் பண்டிதநேரு பேசியதை இஸ்மாயீல்ராவுத்தரும் கேட்டுக்கொண்டுதானிருந்தார். அதை மறுத்து பழைய லீக் மனப்பான்மையை விடமுடியாதென்று அறிக்கை வெளியிட இதுவரை அவர் துணியவில்லை. அப்படிச்செய்தால் என்ன நடக்குமென்பது அவருக்குத்தெரியும். பாகிஸ்தானில் லியாகத் அலிகான் பேச்சை மீறிய குற்றத்துக்காக, சுதந்திரப் போரின் முன்னணியில், வாழ்க்கையையே அர்ப்பணித்த கான் அப்துல்கப்பார்கான் போன்ற தியாகிகள்கூட சிறைக்குள் கிடந்து வாடும்போது, நாட்டின் விடுதலைக்கு சதாமுட்டுக்கட்டை போட்டுவந்த துரோகக் கும்பல், பண்டிதநேருவின் பேச்சை மீறி தப்பித்துக்கொள்ள முடியாதென்பது நினைவிருக்கட்டும்.

பழைய மனப்பான்மையை விடாமல் எப்பொழுதும்போல் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் லீகிலேயே இருந்து வரும்படி யோஜனை கூறி ஒன்றும் புரியாமல் திகைப்புற்றிருந்தவர்களை ஜனநாயகத்துக்கு எதிரான வழிகாட்டிய இஸ்மாயில் ராவுத்தர் மீதும்

அவருடைய சிஷ்ய கோடிகள் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறோம். அத்துடன் முள்ளிருந்த இடத்தில் ஆப்பு வைத்து இறுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கும் பண்டாரவாடை லீகர்களை நிதானத்துடன் நடந்து கொள்ளும்படி யோஜனை கூறுகிறோம்.

முஸ்லிம்கள் லீகிலேயே இருந்து வந்தால் முஸ்லிம்களை எதிரிகள் என்று நினைப்பவர்கள்கூட சலுகைகள் லிக்க முன்வருவார்களாம்! என்னே! இவர்களின் அறியாமை! முதலில் முஸ்லிம்களை எதிரிகளாக நினைப்பதாகச் சொல்லுவதே பச்சைப்பொய். ஒருக்கால் இந்தியர்கள் லீகர்களை எதிரிகள் என்று நினைப்பதாயிருந்தாலும் அதற்கு லீகும், லீக் தலைவர்களுமேதான் காரணம். இந்நிலையில் லீக்கிலேயே இருந்தால் சலுகைகள் கிடைக்குமென்று ஒன்றும் புரியாமல் திகைப்புற்றிருப்பவர்களுக்கு ஆசை காட்டுவதைவிட பெரிய மோசடி வேறெதுவுமிருக்க முடியாது.

முஸ்லிம்களின் நண்பராக லீகர்களால்கூட கருதப்படும் பண்டித நேருவே லீக் மனப்பான்மையுள்ளவர்களுக்கு இந்தியாவில் இடமில்லையென்றும் பாகிஸ்தானுக்கு போய்விட வேண்டியதுதானென்றும் சலுகையளித்திருக்கையில் முஸ்லிம்களை எதிரிகளென்று நினைப்பவர்கள் அளிக்க முன் வரும் சலுகை ....ஸ்தானுக்கு அனுப்புவதாகவே இருக்குமென்று சொல்லவேண்டியதில்லை இருந்தாலும் லீக் தலைவர்களின் போக்கே ஒரு தனிப்போக்கு! அதைவிட சிஷ்ய கோடிகளின் மூளையே தனி மூளை! இதைப் பார்த்து மனவேதனையடையாமலிருக்க முடிவதில்லை.

'ஆஸாத்' வகுப்புத்துவேஷத்தைக் கிளப்புகிறதாம்! இந்த மதியீனத்தை என்னென்று சொல்லுவது! வகுப்புவாதக் குட்டையில் நீண்ட நாள்வரை ஊறிய தோஷமா? அல்லது லீக் அகராதியில் வகுப்பு சௌஜன்யத்துக்கு வகுப்புத்துவேஷமென்று லீக் தலைவர்கள் எழுதியிருக்கிறார்களா? காமாலை கண்களுக்கு சர்வமும் மஞ்சள் மயமாய் படுவதில் ஆச்சரியமில்லை. கூசும் கண்களைப்படைத்த வௌவால், பகல்நேரத்தில் தலைகீழாய் தொங்குவதற்கு, சூரியனை பழிப்பது முறையல்ல.

வகுப்பு துவேஷத்தை வளர்த்து படுநாசம் விளைவித்த லீக் குட்டையிலிருந்து கரையேற வேண்டாமென்று யோஜனை கூறும் ஆசாமி வகுப்புத்துவேஷியாகப்படவில்லையாம்! ஆஸாதின் கம்பீரமான சமரசப் போக்கு வகுப்பு துவேஷத்தைக்கிளப்புகிறதாம்! இம்மாதிரியான புல்லறிவாளர்களின் குற்றச் சாட்டை 'ஆஸாத்' லட்சியம் செய்யப் போவதில்லை. கூச்சல்களைப் பொருட்படுத்தாமல் சமரச வழியில் யானை போல் போய்க்கொண்டுதானிருக்குமென்று பெருமையுடன் வலியுறுத்துகிறோம்

தங்கள் தலைவர்களின் திடசித்தம் பற்றி பெருமைப்படுகிறார்களாம்! பேஷாகப் படவேண்டியது தானே! ஹலாகுவையும், சங்கேஸ்கானையும்கூட தோற்கடித்து விட்டவர்களைப்பார்த்து பெருமை படாமலிருக்கத்தான் முடியுமா?

ஆனால் பெருமை படத்தக்க அவ்வித திடசித்தந்தான் என்னவென்று கேட்காமலிருக்கமுடியாது. இல்லாததைப் பேசுவதும் பேசியதை பிறகு இல்லையென்று மறுப்பதுந்தான் திடசித்தமா? கலவரங்கள் நடந்துகொண்டிருந்த வட இந்திய திசையில் தலையும் வைத்துப் படுக்காமல் கலகங்கள் ஓய்ந்த பிறகு அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளப்போவதுதான் திடசித்தமா?

பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் விரட்டப்படுவதைப் பார்க்கப் பார்க்க லீக் தலைவர்களின் சித்தம் மேலும் மேலும் திடம்பெறுமென்பது வெளிப்படை. ஆயினும் கிழக்குப் பஞ்சாப், டில்லி, ஜ்வாலாப்பூர், குர்முக்தேஸ்வர், பீஹார், கல்கத்தா முதலிய இடங்களில் முஸ்லிம்கள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த சமயத்தில், மசூதிகள் ஹிந்து, சீக்கிய அகதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், பெருமைப் படத்தக்க இந்த திடசித்தம் எங்கே ஒளிந்து கொண்டிருந்ததென்று கேட்காமலிருக்க முடியாது. கலவரங்களை கிளப்பிவிட்டு மாயமாய் மறைந்தார்கள் அல்லது பதுங்கிக்கொண்டார்களே யொழிய லீக் தலைவர்கள் முஸ்லிம்களைக் காப்பாற்ற முன்வந்தார்களென்று விரல் மடக்க முடியுமா? இப்பேர்ப்பட்ட திடசித்தங்களைக் குறித்து பெருமைப்படாமல் முஸ்லிம்களையும் மசூதிகளையும் மீட்பதில் இரவு பகலாய் உழைத்த மௌலானா ஆஸாத் போன்றவர்கள், உயிரையும் லட்சியம் செய்யாமல் வெறிபிடித்த கூட்டத்தில் புகுந்து முஸ்லிம்களின் மார்பில் பாய விருந்த கட்டாரியை கையிலிருந்து பிடுங்கிய பண்டிதநேருவைப் போன்றவர்கள், கடுமையான எதிர்ப்பைக் கண்டும் கலங்காமல் முஸ்லிம்களுக்காகவே பட்டினிகிடக்கிறேனென்று பட்டவர்த்தனமாக அறிவித்து முஸ்லிம்களுக்காகவே உயிரையும் அர்ப்பணித்த மஹாத்மாஜீ பற்றியும் பெருமைப்பட இவர்களுக்குப் பண்பாடு ஏது? தன் சிஷ்ய கோடிகளை அம்முறையில் ஜின்னா சாயபு பண்படுத்த வில்லையே!

'ஆஸாத்' பிரசுரித்த கருத்துக்கள் உண்மைக்கு மாறானவையாம்! லீக் அகராதியில் 'உண்மை', 'கருத்து' என்ற வார்த்தைகளுமா உண்டு! உண்டென்றால், திருச்சி ஜில்லா முஸ்லிம் லீக் உதவி காரியதரிசி வெளியிட்ட அறிக்கையையும், திருநெல்வேலி,

இராமநாதபுரம் ஜில்லாக்களில் நடந்த இடைத்தேர்தல்களின் போதும் லீக் தலைவர் இதே பேச்சை பேசினாரென்று கிடைத்திருக்கும் தகவல்களையும் இவர்கள் மறுக்க முடியுமா? மேலும் 30—10—48 'முஸ்லிம்' இதழில் எம். எ. அப்துல் ஹமீது வெளியிட்ட அறிக்கையில் கூட இதை மறைமுகமாய் ஒப்புக்கொண்டிருப்பதையும், இஸ்மாயீல் சாயபு சட்டசபையில் மறுத்துவிட்டதைப் பார்த்தவுடன் தன் அறிக்கையை பிரசுரிக்க வேண்டாமென்று தந்தி கொடுத்ததையும் இவர்கள் இல்லையென்று சொல்ல முடியுமா? அத்துடன் 28--11--48 வேண்டுகோளில் கூட இரண்டு மந்திரிகள் பற்றிய பேச்சு இஸ்மாயீல் ராவுத்தர் பேசவில்லை யென்று மறுக்கப்படாமலிருப்பது ஏன்?

எதையாவது எழுதி 'ஆஸாத்' பணமூட்டை கட்டப்பார்க்கிறதாம்! தேச சகோதரர்கள் மீது போர் தொடுக்க பத்து கோடி முஸ்லிம்களிடம் தங்கத் தோட்டாக்களையும் வெள்ளி பீரங்கிகளையும் திரட்டியவர்கள் நாங்களா? எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு பாகிஸ்தானுக்கு ஓடியவர்கள் நாங்களா? கராச்சிக்கு ஓடி ஓடிச்சென்று அதில் பங்கு போட்டுக்கொண்டு வந்து பதுக்கி வைத்துக்கொண்டிருப்பவர்கள் நாங்களா? மக்களிடையே வெறுப்பை மூட்ட ஸ்தாபனத்தைக் காட்டி பஞ்சைத் தாள்களின் பெயரைச் சொல்லி ஒன்றுமறியாத ஏழைப்பாமர முஸ்லிம்களிடம் கோடிக்கணக்கில் சுரண்டிய, சுரண்டி வருகிறவர்கள் நாங்களா? எதிரியை பழிப்பதற்கு முன் தங்கள் நிலைமையைக் குறித்து ஒரு வினாடிக்கேனும் சிந்திக்க வேண்டாமா? கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டா அண்டை வீட்டில் கல்லெறிவது!

'ஆஸாத்' மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமாம்! எதற்காக? விஷமிகளின் விஷப்பல்லைப்பிடுங்கும் குற்றத்துக்காகவா? வாயினால் விசுவாசம் பேசி உள்ளுக்குள் விஷ வாசம் செய்யும் போலி விசுவாசிகளின் சாயத்தை வெளுக்க வைக்கும் பாவத்துக்காகவா? அல்லது சுய நலக்காரர்களின் வலையில் சிக்காமலிருக்கும்படி பாமர முஸ்லிம்களை எச்சரித்து வரும் தோஷத்திற்காகவா? எதற்காக நடவடிக்கை யெடுக்கவேண்டும்? இங்கு பாகிஸ்தான் அந்தர்தர்பாரில்லை. இது ஜனநாயக இந்தியாவென்பது நினைவிருக்கட்டும் வேறொரு நாடாயிருந்தால் நாற்பது வருஷங்கள் வரை சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போட்டு நேரடி நட வடிக்கையால் பல லட்சம் உயிர்களுக்கு உலைவைத்த கூட்டம் சுட்டுத் தள்ளப்பட்டிருக்குமென்பது நிச்சயம் ஜனநாயக நாடாக இருப்பதாலல்லவோ பச்சைப் பாம்புகள் கூட சுதந்திரமாய் பாய முடிகின்றது. யார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது எங்கள் சர்க்காருக்குத் தெரியும் ஜின்னா பக்தர்களின் யோசனை ஒன்றும் தேவையில்லை.

இம்மாதிரி அபசகுனங்களின் வேண்டுகோள்களைப் பிரசுரிப்பதற்கு ஒரு பத்திரிகையாம்! அதற்குப் பணம் திரட்ட லீக் தலைவர் சுற்றுப்பிரயாணமாம்! மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாய் விட்ட கட்சிப் பிணத்தை வைத்துக்கொண்டு மாரடித்து இல்லாததை புலம்பித்திரிபவர்களுக்கு வால்பிடிக்க ஒரு கூட்டமாம்! அறிக்கைகளாம் !! வேண்டுகோள்களாம் !!!

ஆண்டவனே! இந்தக் கேவலம் என்று ஒழியுமோ! மு லிம்களுக்கும் இஸ்லாமுக்கும் ஏற்பட்டு விட்ட அபக்கியாதி என்று அகலுமோ! வெறியர்கள் ஏற்படுத்தி விட்ட வேற்றுமை நீங்கி மீண்டும் இந்தியர்கள் பரஸ்பரம் ஆலிங்கனம் செய்துகொண்டு நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒன்றுபட்டு உழைக்கும் நன் நாள் இன்னும் என்றுதான் வருமோ!

ஸ்ரீ ராமவாசம் ரிக்ரியேஷன் கிளப்.

வ. உ. சி. பிரசங்க பேடை.

நாட்டரசன்கோட்டை 25—11—48.மாலை 5½ மணிக்கு வ. உ. சி தினவிழா காரைக்குடி முனிசிபல் சேர்மன் திரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தஞ்சை ஜில்லா டெபுடி பஞ்சாயத்து ஆபீஸர் திரு M. M. செல்லையா B. A, அவர்களும், கும்பகோணம் ஹக்கீம் சகோதரர் ஜனாப் அப்துல்அஜீம் அவர்களும் சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றினையும், தேச தியாகத்தையும் பற்றிமிகவும் விரிவாக எடுத்துரைத்தார்கள் மாணவர்கள் 'ஜெயராமனும் நாராயணனும் விஞ்ச்துரை—வ. உ சி" தர்க்கம் நடித்துக் காண்பித்தது குறிப்பிடத்தக்கது

தலைவர் முடிவுரைக்குப்பிறகு காரியதரிசி இராம. சுப்பைய்யா நன்றி கூற தமிழ்த்தாய் வாழ்த்துடன் இரவு 10-மணிக்கு விழா இனிதே முடிந்தது.

இராம சுப்பையா.
கண. செல்லவேலு.
கூட்டுக் காரியதரிசிகள்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.